விலை ரூபா 3-00

# ஈழநாடு

THE EELANADU
'NATIONAL TAMIL DAILY'

மலர்: 31 | ஆனி 13 | துல்ஹஜ்தா 22 | இதழ் 39
யாழ்ப்பாணம் | செவ்வாய்க்கிழமை | 27-06-1989

## இலங்கை முடிவுக்கு இந்தியா கண்டனம்

[புதுடில்லி]

சார்க் அமைப்புக்களின் வெளிநாட்டு அமைச்சர்கள் மாநாட்டில் கலந்துகொள்ளப் போவதில்லையென்று இலங்கை கூறியிருப்பதை இந்தியா கண்டித்திருக்கிறது.

"இலங்கை இவ்வாறு கூறியிருப்பது சார்க் சாஸனத்துக்கு எதிரானது. இந்த காரணத்தின்படி இருதரப்பு பிரச்னைகளை சார்க் பேச்சுவார்த்தைகளில் சேர்க்க முடியாது."

[8ம் பக்கம் பார்க்க]

## முல்லைத்தீவில் தொடரும் 'ஷெல்' தாக்குதல்கள்

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவில் செல்வபுரம் எனுமிடத்தில் ஷெல் காயங்களுக்குள்ளான நிலையில் மூன்று பேர் யாழ். ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்டுள்ளனர். பி. லங்கேஸ்வரி (வயது 23),

(8-ம் பக்கம் பார்க்க)

# தென்பகுதி நேற்று ஸ்தம்பிதம்!

# துப்பாக்கிச் சூட்டில் பலர் பலி!!

## இ. போ. ச. ஊழியருக்கு மேலும் 24 மணி நேர காலக்கெடு

(கொழும்பு)

**ஜே. வி. பி. (மக்கள் விடுதலை முன்னணி) நேற்று மேற்கொண்ட ஹர்த்தால் நடவடிக்கையினால், கொழும்பு மாநகரமும், அதன் சுற்றுப்புறங்களும் செயலிழந்தன!**

**கடைசியாகக் கிடைக்கப்பெற்ற செய்திகளின்படி, தென்பகுதி முழுவதுமே ஸ்தம்பித்ததாக ஊர்ஜிதப்படுத்தப்பட்டுள்ளது.**

ஜே. வி. பி.யினர் மேற்கொண்ட ஹர்த்தால், வேலை நிறுத்த நடவடிக்கைகளினால் நேற்று தென்பகுதியும், மத்திய பகுதியும் முற்றாக ஸ்தம்பித்தன.

வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டு வரும் இ. போ. ச. ஊழியர்களுக்கு ஆதரவாகவே நேற்று இந்த ஹர்த்தால், வேலைநிறுத்த நடவடிக்கைகளை ஜே.வி.பி. மேற்கொண்டது. இதனால் சகல அரசாங்க, தனியார் அலுவலகங்களும், கடைகளும் மூடப்பட்டுள்ளதுடன் போக்குவரத்துச் சேவைகளும் இப்பகுதிகளில் முற்றாக ஸ்தம்

(8-ம் பக்கம் பார்க்க)

நேற்று வெளியான க.பொ.த. (சா/த) முடிவுகள்:

## யாழ். இந்து முன்னணியில் சில பெறுபேறுகள் கிடைக்கவில்லை

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்தில் நேற்று வெளியான க. பொ. த. சாதரண தர பரீட்சை முடிவுகளின்படி, யாழ். நகரிலுள்ள கல்லூரிகளில் யாழ். இந்துக் கல்லூரி முன்னணியில் உள்ளது.

யாழ். மாவட்டத்திலேயே இந்துக்கல்லூரி முன்னணியில் இருப்பதாக நம்பப்படுகின்ற போதிலும் நகருக்கு வெளியேயுள்ள பிரபல கல்லூரிகளின் முடிவுகள் இச்செய்தி அச்சுக்குக்குப் போகும்வரை கிடைக்கவில்லை.

நேற்று வெளியிடப்பட்ட க. பொ. த. (சாதாரண—புதிய பாடத்திட்டம்)பரீட்சை முடிவுகளின்படி யாழ். இந்துக் கல்லூரி மாணவர்கள் 14 பேர் 6 பாடத்திலும் அதிதிற

(8-ம் பக்கம் பார்க்க)

## பருத்தித்துறையில் திடீர் ஊரடங்கு!
### கரவெட்டியில் குண்டுவெடிப்பு, துப்பாக்கிவேட்டு!

[வடமராட்சி]

பருத்தித்துறை நகரப்பகுதி நேற்றுக்காலை திடீர்ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டு, தேடுதல் வேட்டை தீவிரப்படுத்தப்பட்டது.

இத்தேடுதல் நடவடிக்கையின் போது குண்டுச் சத்தங்களும் துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும் கேட்டன.

திடீர் ஊரடங்குச் சட்டத்தைத் தொடர்ந்து யாழ்ப்பாணம்-பருத்தித்துறைக்கான போக்குவரத்துச் சேவை பாதிப்படைந்தது. எனினும் தனியார் மினிபஸ்கள் யாழ்ப்பாணத்திலிருந்து மந்திகைச் சந்திவரை போக்குவரத்திலீடுபட்டன.

பருத்தித்துறையில் தேடுதல் வேட்டையின்போது கர்ப்

(8ம் பக்கம் பார்க்க)

## கொக்குவில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவிலில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற கண்ணிவெடிச் சம்பவத்தைத் தொடர்ந்து நேற்றுமுன்தினம் கொக்குவில் பொற்பதி பகுதி தேடுதல்நடவடிக்கைக்குள்ளாக்கப்பட்டு சிலர் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டதாகத் தெரியவருகிறது. இளைஞர் ஒருவர் பலியானார் என்றும் சிலர் காயமடைந்ததாகவும் அறியப்படுகிறது.

## யாழ். நகரில் நேற்று நண்பகல்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில், நேற்று நண்பகல் பாரிய சத்தத்துடன் குண்டொன்று வெடித்தது.

பாழடைந்த யாழ். மாநகர சபைக் கட்டிடங்கள் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டதால் ஏற்பட்ட சத்தமே இக்குண்டுச் சத்தம் எனத் தெரியவருகிறது.

## இடதுசாரி கட்சிகள் மீது ஜே.வி.பி. தாக்குதல் முஸ்தீபு?

(கொழும்பு)

ஜே. வி. பி. தனது தாக்குதல்களை, இரு இடதுசாரிக் கட்சிகள் மீது மேற்கொள்ளவாமெனகட்சிகளின் தலைமைப் பீடங்களை ஆதாரம் காட்டி செய்திகள் தெரிவிக்கின்றன.

தென்பகுதியில் மக்கள்ஆதரவைப்பெற்ற என்.எஸ்.எஸ்.பி. மீதும், 'ஜனதா சங்கமய'

(8-ம் பக்கம் பார்க்க)

## ஜே. வி. பி. அரசியல் பிரிவு பெண் உறுப்பினர் கைது

(கொழும்பு)

ஜே. வி. பி.யின் அரசியல் பிரிவைச் சேர்ந்த முக்கிய பெண் உறுப்பினர் ஒருவரை காலி பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

24 வயதுள்ள இந்தப்பெண், அம்பகம என்னுமிடத்தில் ஜே.வி. பி.யின் முக்கியதஸ்தா

(8ம் பக்கம் பார்க்க)

## ஜே. வி. பி. தீவிரவாதிகளுக்கு வெளிநாட்டு உதவிகள்?
### பாதுகாப்பு வட்டாரங்கள் சந்தேகம்

(கொழும்பு)

ஜே.வி.பி.யினர்மேற்கொள்ளும் தாக்குதல்களுக்கு வெளிநாட்டு உதவிகள் கிடைக்கலாமென்று தாம் கருதுவதாக, பாதுகாப்புப்படை உயரதிகாரி ஒருவர் கொழும்பில் தெரிவித்துள்ளார்!

கடந்த சில வாரங்களில் தென்பகுதியில் பாதுகாப்பு படை முகாம்கள் மீதான பல தாக்குதல்களும் கண்ணிவெடித்தாக்குதல்களும் அதிகரித்திருப்பதையடுத்தே தாம் இவ்வாறு சந்தேகப்படுவதாக

(8-ம் பக்கம் பார்க்க)

## சார்க் வெளிவிவகார அமைச்சர்கள் மாநாடு: இலங்கைகலந்துகொள்ளாது!

(கொழும்பு)

பாகிஸ்தானில் அடுத்த மாத முதல் வாரத்தில் நடைபெறும் சார்க் அமைப்பு நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் மாநாட்டில் கலந்துகொள்வதில்லை என்று இலங்கை அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது.

வெளிவிவகார அமைச்சரும், பாதுகாப்புத்துறை ராஜாங்க அமைச்சருமான திரு. ரஞ்சன் விஜேரத்ன இத் தகவலைத் தெரிவித்தார்.

கம்உதாவ கண்காட்சித்திடலில் அமைந்துள்ள பாராளுமன்ற மாதிரிக் கட்டடத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

சார்க் உச்சி மாநாட்டின் பிரதான நகல் சட்டமூலத்தின் படி ஒரு அங்கத்துவநாடு

(8-ம் பக்கம் பார்க்க)

## இலங்கை நிலைமை பற்றி பிரபல சோதிடர் ராமன் ஆருடம்

(பெங்களூர்)

இலங்கை நிலைமைதொடர்ந்தும் சிக்கலானதாகவும், குழப்பம் நிறைந்ததாகவும் இருக்குமென்றும்; எதிர்பாராத வேளையில் ஆச்சரியப்படத்தக்க முன்னேற்றங்கள் ஏற்படலாமென்றும் இந்தியாவின் பிரபல சோதிடர் திரு. பி. வி. ராமன் தனது 'சோதிட சஞ்சிகையில்' தெரிவித்துள்ளார்.

அண்மையில் வெளியிடப்பட்ட இந்த சஞ்சிகையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

"தமிழ், சிங்கள தீவிரவாதக் குழுக்களின் ஆதிக்கம் தொடர்ந்தும் இலங்கை அரசை பாதிக்கும். இந்தநிலை இலங்கையில் ஓர் ஸ்திரமற்ற

(8-ம் பக்கம் பார்க்க)

## முருகண்டியில் இளைஞர் சுட்டுக்கொலை

(முருகண்டி)

முருகண்டிப் பிள்ளையார் கோவிலுக்குச் சமீபமாக நேற்றுமுன்தினம் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இளைஞர் ஒருவர் பலியானார்.

இனந்தெரியாதவர்களினால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டிலேயே இளைஞர் பலியானதாகவும் தெரிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

வண்ணார்பண்ணை நாவலர் வீதியில் ஒரு பரப்பு 11 குளிகள் காணி விற்பனைக்குண்டு, இல. 177 (131), நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (சி 3007)

சீயாக்காய், பயறு, உழுந்து அரிசி ஆகிய நான்கு இயற்கை பொருட்கள் அடங்கிய சீயாக்காய் பவுடரை பாவித்து உங்கள் கூந்தலை அடர்த்தியாகவும், குளிர்மையாகவும் வைத்திருக்கவும். கிடைக்குமிடம் M. G. M. 777 K.K.S. Rd 208, 1st Cross Street Jaffna. சி2928

கைதடி நுணாவில் கண்டி வீதியில் வயிரவர் கோவிலடிக்கு அருகாமையில் வீடு கட்டி குடியிருக்க வசதியான 3 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்:- சின்னத்தம்பி ஸ்ரோர்ஸ், தி. இரத்தினம், பெரியகுளம் வீதி, கைதடி, நுணாவில், சாவகச்சேரி. (சி-3019)

கொழும்புத்துறை வளன்புரத்தில் புனித சவேரியார் குருமடத்திற்குஅருகாமையில் கிழக்குப்புறமாக புளியடிப் புலம், (இல.121)மணல் வளவு (இல. 122) என்ற இரண்டு காணித்துண்டுகள் மூன்று பரப்பு முழுமையாக அல்லது பகுதி பகுதியாக உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி; Mr. Clive Ariaratnam C/o Mr. B. F. Selladurai. Retired Village Headman, Pandatheruppu. (சி 3012)

### தேவை

உரும்பராயில் உள்ள பார்மஸி (Pharmacy) ஒன்றிற்கு நல்ல அனுபவமுள்ள பெண் விற்பனையாளர்கள் (Sales Girls) தேவை. 05-07-89க்கு முன் விண்ணப்பிக்கவும் விளம்பர இல. சி 3011 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். (சி 3011

திருநெல்வேலி சுற்றுடலில் ரியூட்டரி நடத்தக்கூடிய ஒரு அகலமான விறாந்தை அல்லது Hall தேவை. வாடகை பற்றிய விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. ஏ 309, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். (ஏ 309)

கொழும்பு தலைமை அலுவலக தொடர்புடைய யாழ் நகரில் உள்ள பிரபல பொருள்கள் விற்பனை செய்யும் ஏஜென்சி நிறுவனம் ஒன்றிற்கு Stock Clerk தேவை விண்ணப்பிப்பவர்கள் க. பொ. த. (சாதாரண) பரீட்சையில் கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். ஆங்கிலத்தில் வேலை செய்யக்கூடியவராயும், தட்டச்சு (Typing) அனுபவமுடையவராயும் 30 வயதுக்கும் 40 வயதுக்கும் இடைப்பட்டவராயும் இருத்தல் வேண்டும். முன் அனுபவம் விரும்பத்தக்கது. விண்ணப்பிக்க வேண்டிய முகவரி- விளம்பர இல:- A-311 மே/பா. ஈழநாடு, யாழ்ப்பாணம். (A- 311)

## மகோற்சவம்

(சுன்னாகம்)

சுன்னாகம் மயிலணிக் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவம் நாளை புதன்கிழமை நடைபெறும் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

அடுத்த மாதம் 8ம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும். தினமும் மாலை நற்சிந்தனை இடம்பெறும்.

# உடப்புசல்லாவை பகுதியில் இரு தமிழர்கள் கொலை

(கொழும்பு)

உடபுசல்லாவைப் பகுதியில் உள்ள இரு தோட்டங்களில் இரு தமிழர்கள் ஆயுதம் தாங்கிய ஒருகோஷ்டியினால் அழைத்துச் செல்லப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்டனர்.

வேல்மார் தோட்டத்தை சேர்ந்த இ. தொ. காங்கிரஸ் பிரதேசத் தலைவர் சண்முகநாதன் (24), எம்மஸ்ட்தோட்டத்தைச்சேர்ந்த சௌந்தரராஜன் (22) ஆகியோரே இவ்வாறு சுட்டுக்கொல்லப்பட்டவர்களாவர்.

பொலிசார் என தம்மை அழைத்துக்கொண்ட சுமார் 12 பேர் கொண்ட ஆயுதம் தாங்கிய கோஷ்டி ஒன்று சம்பவதினம் இவர்களது வீட்டை தட்டி எழுப்பி குறிப்பிட்ட நபர் ஒருவரது வீட்டைக் காட்டுமாறு அழைத்துச் சென்று சுட்டுக்கொன்றுள்ளதாக கூறப்பட்டிருகிறது.

இவர்களது சடலங்களுக்கு அருகே ''தேசத்துரோகி மரண ஊர்வலத்துக்குத்தடை கரிகாலன்'' எனஎழுதப்பட்ட துண்டுப் பிரசுரம் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## கேள்வி விளம்பரம்

### வலி வடக்கு பிரதேச சபை காங்கேசன்துறை

காங்கேசன்துறை உப அலுவலகப் பகுதியின் சந்தைக் கடை. இல. 3, 4 வாடகைக்கு வழங்கப்படவுள்ளது. கேள்விப்பத்திர முடிவு திகதி 10-7-1989. விண்ணப்ப முடிவு திகதி 14-7-1989. மதியம் 12-00 மணியாகும். மேலதிக விபரங்களை இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**வை. இராசையா**
விசேட ஆணையாளர்,
வலிகாமம் வடக்கு
பிரதேச சபை,
காங்கேசன்துறை.

வலி வடக்கு பிரதேச சபை
பணிமனை,
காங்கேசன்துறை.

(ஏ 306)

# ஆட்கொணர்வு மனு சட்டம் விரைவில் திருத்தப்படலாம்?

## கால அவகாசம் அதிகரிக்கப்படும்

(கொழும்பு)

கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்களை நீதி மன்றத்தில் ஆஜர்படுத்தக் கோரும் ஆட்கொணர்வு மனுவைத் தாக்கல் செய்வதற்கான கால எல்லை அதிகரிக்கப்படலாம் என தெரிவிக்கப்படுகிறது.

சந்தேக நபர் ஒருவர் தொடர்பாக ஆட்கொணர்வு மனுவை தாக்கல் செய்வதற்கான கால எல்லையை ஆறு மாதத்துக்கு நீடிப்பது தொடர்பாக நீதி அமைச்சு நடவடிக்கைஎடுத்துவருகிறது. இதற்காக ஆட்கொணர்வுமனு சட்டம் திருத்தப்படவுள்ளதென நீதி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போதைய விதிகளின் படி ஆட்கொணர்வு மனுவைத் தாக்கல் செய்வதாயின் குற்றம் சாட்டப்பட்டவர் கைது செய்யப்பட்ட தினத்தில் இருந்து 30 நாட்களுக்குள் செய்யப்பட வேண்டும்.

ஆட்கொணர்வு மனுவை தாக்கல் செய்வதற்கான கால எல்லையை 6 மாதத்துக்கு நீடிக்க வேண்டும் என திரு. அமிர்தலிங்கம், திரு. தினேஷ் குணவர்தன, திரு. சி. வி. குணரத்ன முதலியோரைக் கொண்ட குழுவொன்று பிரதமர் திரு. பி. விஜேதுங்கவிடம் கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (து)

வடமராட்சியில்

# 'ஏஜென்சி' தபால் நிலையங்களை திறக்க நடவடிக்கை

(பருத்தித்துறை)

பருத்தித்துறையிலும், வல்வெட்டித்துறையிலும் ஏஜன்சி தபால் நிலயங்களைத் திறந்து மக்களுக்குச் சேவையாற்றுவதற்கான நடவடிக்கைகளை பருத்தித்துறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் மேற்கொண்டுள்ளது. இத்துடன் பருத்தித்துறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் சகல கிளைகளிலும் முத்திரைகளை விற்பனை செய்வதற்கும் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது.

இந்நடவடிக்கைகள் பற்றி பருத்தித்துறை பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம் தபால், தொலைத்தொடர்பு அமைச்சுடன் தொடர்புகொண்டுள்ளது. அமைச்சு அனுமதி வழங்கியதும் பருத்தித்துறை வல்வெட்டித்துறை ஆகிய இரு இடங்களிலும் ஏஜன்சி தபால் நிலையங்கள் திறந்துவைக்கப் படுவதுடன் பருத்தித்துறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் சகல கிளைகளிலும் முத்திரை விற்பனையும் நடைபெறுமென பருத்தித்துறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க இயக்குநர் சபைத் தலைவர் திரு. எஸ். கந்ததாசன் தெரிவித்தார்.

அத்துடன் பருத்தித்துறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் பேக்கரி ஒன்றையும் ஆரம்பித்து பாவனையாளர்களுக்கு பாண், பணிஸ், பிஸ்கெற் வகைகளையும் விநியோகிப்பதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது.

## இராசி பலன்

**27-06-1989**

நவமி இரவு 11-14 வரை; ரேவதி இரவு 10-41 வரை; இராகுகாலம் 2-56 முதல் 4-30 வரை; அமிர்தசித்த யோகம், அசுபதினம்.

மேடம்:- தொழிலில் உத்வேகம், அரசியல் சிந்தனை, குடும்பத்தில் மகிழ்ச்சி, இனசனக் கொண்டாட்டம்.

இடபம்:- மனைவிமூலமான கவலை, பொருள்செலவு, நண்பர் விரோதம், அகால போசனம், நஷ்டம்.

மிதுனம்:- குடும்பத்தில் சுப நிகழ்ச்சி, கலியாணம், தாய்வழி உதவி, ஆபரண யோகம், மன நிறைவு.

கடகம்:- இராஜ சன்மானம், பெரியோர் ஆசி,

(7-ம் பக்கம் பார்க்க)

## நித்தியின் நினைவஞ்சலி



**திருமதி நல்லைநாதன் நித்தியலஷ்மி**
B. A. (Cey.) Dip. in Ed. M. A. Q.

நிலவுலகில்: 24-4-1940 — நிமலனடியில்: 27-6-1987

நிறைவு செய்யமுடியாத மறைவு
நீண்டதோர் பயணத்தின் நிலையான துணையென
நினைத்திருந்தேன்,
நினைவுகள் நினைவுகள் தான் நிஜமாவதில்லையோ?
நிமலா; நித்தம் நீறணிந்து நின் தாளை
நினைந்துருகும்
நியமமுடைய நித்தி நீங்கி ஈராண்டுநிறைவாகிறது.
நிலை குலையச் செய்துவிட்டதே.
நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லையே
நினை விருக்கும் நெஞ்சிருக்கும் வரை
நீங்காது நிலைத்து விட்ட நினைவலைகள் மோத
நித்தியின் நிஜ உருவம் நிழலாக நின்றாடுகின்றது.
நின் இழப்பை நினைந்து வாடும்;

நல்லைநாதன்.

375/7, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (சி 3008)

## 6-ம் ஆண்டு நினைவஞ்சலி



**சிவஸ்ரீ கு. இராமநாதக் குருக்கள்**

மலர்வு: 10-9-1914 — பூரணம்: 04-7-1983

திதி: அபரபக்ஷ நவமி திதி (27-6-89)

இணுவில் கந்தசாமி கோவில் பரம்பரை பிரதம குருவும், இணுவில் செகராஜசேகரப்பிள்ளையார் கோவில் முன்னாள் பிரதம குருவுமாகிய

அமரர்
''சிவாஹம கிரியா சிரோரத்தினம்''
பிரதிஷ்டா பூஷணம்

**சிவஸ்ரீ கு. இராமநாதக் குருக்கள் அவர்கள்**

பூரணமாகி ஆறு ஆண்டுகளாகும் இவ்வேளையில் அன்னாரை நினைவுகூருவோமாக.

ஸ்ரீ இராமநாதம் இராம நாமம்
இணுவில் நாதம் இராமநாதம்
இனிமையான நாதம் இராமநாதம்
எழுமையான நாதம் இராமநாதம்
என்றும் புகழும் நாதம் இராமநாதம்
அருமையான நாதம் இராமநாத குருவே.

**பாசமுள்ள மனைவி, பிள்ளைகள்.**

(சி 3015)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீன கம்யூ. கட்சிக்குள் தூய்மைப்படுத்தும் நடவடிக்கை ஆரம்பம்!

## 5 கோடி நடவடிக்கைக் குழு உறுப்பினர்களுக்கு அழைப்பு

(பீக்கிங்)

**சீன மாணவர் ஜனநாயகப் போராட்டத்தை அடுத்து சீனக் கம்யூனிஸ்ட் கட்சிக்குள் எழுந்துள்ள நெருக்கடியைத்தீர்க்கும் வகையில் கட்சியைத் தூய்மைப்படுத்தும் நடவடிக்கையில் கம்யூனிஸ்ட் தலைமைப்பீடம் ஈடுபட்டுள்ளது என அறிவிக்கப்படுகிறது.**

சீன கம்யூனிஸ்ட் கட்சிக்குள் மாணவர் ஜனநாயகப் போராட்டத்திற்கு ஆதரவாக இருந்தவர்களை வெளியேற்றி அவர்களுக்கு எதிராக குற்றவியல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பணியில் தலைமைப் பீடம் தற்போது ஈடுபட்டுள்ளது.

மாணவர் போராட்டத்திற்கு கம்யூனிஸ்ட்கட்சியில் உள்ள இளம்அங்கத்தவர்களே பெரும்பாலும் ஆதரவளித்து வந்தனர் என்றும் மாணவர் போராட்டத்தின் போது கட்சியின் ஒழுங்கு நடவடிக்கை ஆணைக்குழு நடவடிக்கை எடுத்து வருகிறது என்றும் கட்சித் தலைமைப்பீடம் உத்தியோகபூர்வமாக அறிவித்தது.

### 5 கோடி உறுப்பினர்களின் ஆதரவு வேண்டும்

மேற்படி ஆணைக்குழுவின் நடவடிக்கைகளுக்கு இக்குழு 4 கோடி 80 லட்சம் அங்கத்தவர்களும் பூரண ஆதரவு அளிக்கவேண்டும் என்று ஆணைக்குழுவின் தலைமைப் பீடம் கோரிக்கை விடுத்துள்ளது.

கட்சியின் கட்டுப்பாடுகளை மீறியவர்கள் கட்சியிலிருந்து நீக்கப்படுவதுடன் வேலை நீக்கம் மற்றும் நீதிமன்ற விசாரணைக்கும் உட்படுத்தப்படுவர் என்றும் அறிவிக்கப்பட்டது.

சீனக்கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் பதவியிலிருந்து திரு. ஷாவோ சியாங் வெளியேற்றப்பட்டது தெரிந்ததே.

## போதைவஸ்து குற்றச் செயல்: 50 ஆயிரம் பேர் சிறைகளில் 600பேருக்கு மரணதண்டனை!

### ஈரானில் 2 லட்சம் குற்றவாளிகள்

(தெஹ்ரான்)

போதை வஸ்து கடத்தல், பாவனை போன்ற குற்றங்களுக்காக ஈரான் இவ்வாண்டு இதுவரை 600 க்கு மேற்பட்டவர்களுக்கு மரண தண்டனை நிறைவேற்றியுள்ளது என ஈரான் செய்திஸ்தாபன 'இர்னு' தெரிவித்துள்ளது.

அத்துடன் போதை வஸ்து குற்றங்களுக்காகத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள 50 ஆயிரம் பேர் சிறைகளிலும் தொழில் முகாம்களிலும் வைக்கப்பட்டுள்ளனர் என்றும் இவர்களில் சிலர் சிறைச்சாலை நலன்புரிச் சங்கங்களினால் வழிநடத்தப்படுகின்றனர் என்றும் அச்செய்தி ஸ்தாபனம் தெரிவித்தது.

போதைவஸ்து குற்றங்களுடன் தொடர்புடைய 2 லட்சம் பேர் ஈரானில் உள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## சகல பாதைகளையும் இந்தியா மூடியது; நேபாளத்தில் பொருளாதார நெருக்கடி!

(காட்மண்டு)

இந்தியா வழியாக நேபாளம் செல்லும் சகல எல்லைப் பாதைகளையும் இந்தியா மூடிவிட்டதை அடுத்து நேபாளம் பெரும் பொருளாதார நெருக்கடிக்குள் அகப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

கடந்த மார்ச் மாதத்தில் நேபாளத்திற்கான 15 எல்லைப் பாதைகளை இந்தியா மூடியதை அடுத்து நேபாளம் வேறு நாடுகளிலிருந்துஎண்ணை உட்பட பல பொருள்களை மிகுதியாக இருந்த இரண்டு எல்லைப்பாதைகளினூடாகத் தருவித்தது. எனினும் இந்தியா தற்போது எஞ்சிய இரு பாதைகளையும் மூடிவிட்டது.

இந்த இரு எல்லைப்பாதைகளிலும் சிங்கப்பூரிலிருந்து தருவிக்கப்பட்ட பெற்றோலியம் பொருள்களுடன் 110 எண்ணைத்தாங்கிகளையும் பல லொறிகளையும் இந்திய சுங்கப் பகுதியினர் தடுத்து நிறுத்தியுள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டது.

## சீனாவில் பெற்றோல் விலை அதிகரிப்பு

(பீக்கிங்)

சீனாவில் பெற்றோல், டீசல் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

40 முதல் 77சத வீதம் வரை இந்தப் பொருள்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஆப்கான் அதிபரின் அரசியல் எதிரிக்கு பிரதி பிரதமர்பதவி

### சமாதானத் திட்டத்தின் அங்கம்

(காபூல்)

ஆப்கானிஸ்தான் அதிபர் டாக்டர் நஜிபுல்லா தமது அரசியல் எதிரி ஒருவருக்கு பிரதிப் பிரதமர் பதவியை வழங்கியுள்ளார்.

ஆப்கானிஸ்தான் அரசியல் நெருக்கடிக்கு முற்றுப்புள்ளி வைக்கும் தமது தேசிய சமானத் திட்டத்தின் ஒரு படியாகவே டாக்டர் நஜிபுல்லா ஜஉப். மஹ்மூட் பரியலாய் என்பவரை முதலாவது பிரதிப் பிரதம மந்திரியாக நியமித்துள்ளார்.

பதவி இறக்கம் செய்யப் பட்ட ஆப்கானிஸ்தான் அதிபர் டாக்டர் பபரக் [illegible]லின் சகோதரரான ஜஉப் பரியலாய் ஆப்கான் கிளர்ச்சிக்காரர்களுக்கு ஆதரவாக இருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கடந்த 2 மாதங்களுக்கு முன்புவரை அரசாங்கத்தினால் தடுப்புக்காவலில் வைக்கபப்ட்டிருந்தார்.

தற்போது இவர் 27 அங்கத்தவர்களைக் கொண்ட ஆப்கானிஸ்தான் அமைச்சரவையில் பிரதமருக்கு அடுத்தபதவியில் அமர்த்தப்பட்டுள்ளார்.

### 60 புரட்சியாளர் பலி

இதே வேளையில், ஜலாலாபாத்தில் இடம்பெற்ற அரசுத் துருப்புகளுக்கும் புரட்சி[illegible] இடையில் ஏற்பட்ட மோதலில் 60 புரட்சியாளர்கள் பலியாகினர் என்றும் 89 பேர் காயடைந்தனர் என்றும் அறிவிக்கப்பட்டது.

## 'எய்ட்ஸ்' நோயை எதிர்க்க ரூ. 2கோடிதிட்டம்

### பாக். அரசு நடவடிக்கை

(இஸ்லாமாபாத்)

'எய்ட்ஸ்' நோயை எதிர்த்துப் போரிடப் பாகிஸ்தான் 2கோடி ரூபா செலவில் பாரிய திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தவுள்ளது.

இத்திட்டத்தின்படி பாகிஸ்தானிலுள்ள சகல வெளிநாட்டவர்களும் 'எய்ட்ஸ்' பரிசோதனை செய்துகொள்ள வேண்டும் என பாகிஸ்தான் அரசு உத்தரவிட்டுள்ளது.

முக்கிய நகரங்களில் பதினொரு 'எய்ட்ஸ்' ஆய்வுகூடங்களும் நிறுவப்பட்டுள்ளன.

## வகுப்புவாத சக்திகளுடன் எதிர்க்கட்சிகள் இணைகின்றன

### இந்திரா காங்கிரஸ் செயலர் குற்றச்சாட்டு

(புதுடில்லி)

ஆட்சியைக் கைப்பற்றும் நோக்கம் கொண்ட இந்திய எதிர்க்கட்சிகள் வகுப்புவாத சக்திகளுடன் இணைந்துகொள்கின்றன.

இவ்வாறு இந்திரா காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர்களில் ஒருவரான ஜனுப் குலாம் நபி அஷாத் தெரிவித்தார்.

ஜம்மு - காஷ்மீரில் நடைபெற்ற ஒரு வைபவத்தில் உரையாற்றிய ஜனுப் அஷாத் மேலும் பேசுகையில், ஆட்சியைக் கைப்பற்றும் நோக்கத்தை மட்டுமே கொண்டுள்ள எதிர்க்கட்சிகளிடம் ஆக்கபூர்வமான திட்டங்கள் எதுவும் கிடையாது என்றும் கூறினர்.

## ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர்களும் தெரிவு

(கொழும்பு)

ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர்களும் புதிதாக ஆங்கில ஆசிரியர்களாகத் தெரிவுசெய்யப்படவுள்ளனர். இதற்கான நடவடிக்கைகளை கல்வி அமைச்சு மேற்கொண்டு வருகிறது.

இவர்கள்ஓய்வுபெறும்போது பெற்ற சம்பளத்தையும் மேலதிக அலவன்ஸையும் வழங்க அமைச்சு முடிவுசெய்துள்ளது.

இவ்வாறு தெரிவாகும் ஓய்பெற்ற ஆங்கில ஆசிரியர்கள் புதிய பதவி தெரிவின்போது எவ்வித நேர்முகப் பரீட்சைக்கும் தோற்றவேண்டியிராதென்றும் அமைச்சு தெரிவித்துள்ளது.

## பண்டிதமணியின் செந்தமிழ்க்களஞ்சியம்

### நினைவுவிழாவில் வெளியிடப்படும்

(யாழ்ப்பாணம்)

இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களின் நினைவு விழா அடுத்த மாதம் மூன்றும் வாரமளவில் நடைபெற இருக்கிறது.

பண்டிதமணியின் நினைவாக நூற்றுக்கு மேற்பட்ட அறிஞர்கள் எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரைகளும், இருபத்தைந்துக்கு மேற்பட்ட கவிஞர்களின் செய்யுள்களும் பண்டிதமணி நினைவு மலரில் இடம் பெற்றுள்ளன. பண்டிதமணியின் வாழ்க்கை வரலாற்றை எடுத்துக்காட்டும் வகையில் படங்களும் ஆங்காங்கே இணைக்கப்பட்டுள்ளன.

பண்டிதமணி எழுதிய இருபத்தேழு கட்டுரைகளைக் கொண்ட செந்தமிழ்க் களஞ்சியம் என்ற நூலும் அச்சுவாகனமேறியுள்ளது.

மேற்குறிப்பிட்ட விழாவில் பண்டிதமணி நினைவு மலரும், செந்தமிழ்க்களஞ்சியம் என்ற நூலும் வெளியிடப்படும்.

பண்டிதமணியின் தொண்ணூறுவது பிறந்தினம் இன்று செவ்வாய்க்கிழமை ஆகும். பண்டிதமணியின் தொண்ணூறுவது பிறந்த தினத்தை நினைவுகூரும் வகையில் கனிஷ்ட பொதுத்தராதரப்பத்திர உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான இலக்கிய வழி (திருத்தப் பதிப்பு) ஐந்தாவது பதிப்பாக இந்த வார இறுதியில் வெளிவரவுள்ளது. பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபையின் காரியதரிசி ஆசிரியமணி திரு. அ. பஞ்சாட்சரம் இந்த விபரங்களை 'ஈழநாடு'க்கு தெரிவித்தார்.

## 'சார்க்' ஓவியர் முகாம்

(புதுடில்லி)

சிம்லாவில் நடைபெற்ற 'சார்க்' நாடுகளைச் சேர்ந்த ஓவியர்களின் முகாமில் 21 தலை சிறந்த ஓவியர்கள் பங்குபற்றினர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சிம்லாவில் 11 நாட்களாக நடைபெற்ற இந்த ஓவியர்களின் முகாம் நேற்றுமுன் தினம் முடிவுற்றது.

## விவசாய பொறுப்பாசிரியர்

[சுன்னகம்]

முறைசாராக்கல்வியின் மத்திய நிலையமாகத் தெரிந்தெடுக்கப்பட்ட சுன்னகம் இராமநாதன் மகளிர்கல்லூரிக்கு விவசாயப் பயிற்சி ஆசிரியர் திரு. செல்லகுமாரன் பொறுப்பாசிரியராக பொறுப்பேற்றுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

உலகப் பொருள்களின் மீது ஒரு லவலேசப்பற்று இருப்பினும் கடவுளைக்கண்டறியமுடியாது. நூலில் மிகச்சிறு இழை ஒன்று நீட்டிக்கொண்டிருந்தாலும் ஊசியின் காதுவழியாக நூல் நுழைய முடியாது.

— ஸ்ரீராமகிருஷ்ணர்

## நமது நோக்கு

# ஏழைக்கு எழுத்தறிவித்த 'ஏழை' [POOR] !

"அன்ன யாவினும் புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்..."

இது கல்விக் கண் திறக்கப் பாரதியார் பாடிய பாடல். எத்தகைய செல்வம் இருந்தாலும் நொடிப் பொழுதில் அழிவதை நேரிலே காணும் இந்த நாளிலே, அழியாத செல்வம் எது? கல்வி என்பது பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கண்ட உண்மை.

பாரதியார் பாடுவதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பே எமது பகுதி ஏழைகளுக்கு எழுத்தறிவிக்க வந்தார் ஒருவர். அவர் 'பெயரளவில்' ஏழைதான்; ஆனால் கல்வியிற் கடல். அவர் யார்? அவர்தான் டாக்டர் டானியல் புவர் Daniel Poor)

அமெரிக்க மிஷனரியான புவர் வேறு நண்பர்களோடு 1816ல் கொழும்புக்கு வந்திருக்கின்றார். சிங்கள, தமிழ் மாணவர்களுக்காகச் சில பாடசாலைகளைத் திறந்திருக்கிறார். ஆறுமாதங்களுக்கு மேல் அவர் சேவை அங்கு நீடிக்காதது யாழ்ப்பாணம் செய்த புண்ணியம்!

1816 அக்டோபரில் யாழ்ப்பாணம் வந்திருக்கிறார். முதல் எட்டு ஆண்டுகளில் 90 பாடசாலைகளை யாழ்ப்பாணத்திற் திறந்திருக்கின்றார். 1836ல் இத்தொகை 154 ஆக அதிகரித்திருக்கின்றது. இந்தச் செயல் வேகம் எதனைக் காட்டுகின்றது? முதலாவது அவர் தனது நோக்கத்தை நிறைவேற்றுவதற் கொண்டிருந்த அக்கறை, விடா முயற்சி, இரண்டாவது, அக்காலத்தில் நமது பகுதியில் முறையான பாடசாலை இல்லாக்குறை.

பல நாட்டு மிஷனரிகள் ஆரம்ப பாடசாலைகளைத் தொடக்கிக் கொண்டிருந்த வேளையில், புவர் அவர்களின் கவனம் உயர்கல்வியிலும் சென்றிருக்கின்றது. எனவே தான் அவர் ஒருபடி உயர்ந்து காணப்படுகின்றார். ஒரு பல்கலைக்கழகத்தையே ஆரம்பிக்கவேண்டுமென்றுமுயற்சிஎடுத்திருக்கின்றார். ஆனால் அன்றிருந்த ஆங்கிலேய ஆட்சியாளர் 'புத்திசாலிகள்'; முளையிலேயே கிள்ளிவிட்டார்கள்; அரசாங்க சாசனம் இவருக்குக்கிடைக்கவில்லை! நட்டம் நமக்குத்தான்!

மிஷனரியல்லவா? புவர் சோர்ந்துவிடவில்லை. 'பற்றிக் கோற்ரு செமினரி' என்ற கலாசாலையைத் தொடக்கினார். வெறும் மொழிக் கல்வியோ, மதக் கல்வியோ மாத்திரம் அங்கு இடம்பெறவில்லை. தத்துவம், அளவையியல், கணிதம், விஞ்ஞானம், போன்ற பல்வேறு துறைகளிற் கல்வி போதிக்கப்பட்டது. இன்று புகழ்பெற்று வரும் வானசாஸ்திரம் கூட அங்கு போதிக்கப்பட்டது.

பதினேராண்டுகளுக்கு மேலாக இந்தச் செமினரியின் அதிபராக விளங்கினார் புவர். அது மாத்திரமல்ல, சமயம், விஞ்ஞானம், கணிதம் போன்ற துறைகளுக்குப் பேராசிரியராக விளங்கினார். அவர் முயற்சியால் யாழ்ப்பாணக் கல்வியில் ஏற்பட்ட மறுமலர்ச்சியை யார் தான் மறக்கமுடியும்?

சிலகொள்கை வேறுபாடு காரணமாக இந்தச் செமினரி யாழ்ப்பாணக் கல்லூரியாக மாறியது. எனினும் அவர் வித்திட்ட நிலையம் ஆல் போல் தழைத்துப் பலருக்கு நிழல்கொடுத்து வருவதை நினைவூட்டவேண்டிய அவசியமில்லை. ஏன்? அவரது இருநூறாவது பிறந்த தினத்தை இன்று வட்டுக்கோட்டையில் கொண்டாடுகிறார்கள். அங்கு சென்று பாருங்கள்! அவர் நினைவோ என்னவோ, ஆலமரநிழல் இன்றும் பலருக்கு நிழல் கொடுத்து வருகின்றது; கல்விக்கண் திறக்கிறது.

இதைவிட, அவர் நினைவை நாம்கொண்டாட வேண்டிய வேறு காரணமும் ஒன்றுண்டு. எது என்ன? இலங்கையின் முதலாவது தமிழ்ப் பத்திரிகை 'உதயதாரகை' ஆகும், இலங்கையின் இரண்டாவது ஆங்கிலப் பத்திரிகை 'மோனிங் ஸ்டார்' இவ்விரு பத்திரிகைகளையும் 7-1-1841 ல் தோற்றுவிக்க மூல காரணராயிருந்தார்; பத்திராதிபராகவும் இருந்தார். விளைவு? யாழ்ப்பாணக் கல்லூரி பல பத்திரிகையாளர்களை உருவாக்கி வருகின்றது.

''வீதி தோறும் இரண்டொரு பள்ளி நகர்கள் எங்கும் பல பல பள்ளி''களை ஆக்கிய உத்தமர் சேவையைப் போற்றுவோமாக! நன்றி மறக்கலாமா?

---

### இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு

# 62 கோடி ரூபா நிதிஉதவி; ஜப்பான் வழங்குகிறது

(கொழும்பு)

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தொழில் நுட்ப அபிவிருத்திக்கு ஜப்பான் சுமார் 62கோடிரூபா வரைவழங்க முன்வந்துள்ளது.

இந்த நிதிமூலம் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் "ஷோட் வேவ்" அலைவரிசை மூலம் ஒலிபரப்பு வசதிகளை அதிகரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இம் முயற்சிகள் விரைவில் ஆரம்பமாகவுள்ளது.

எக்கலப்பகுதியில் புதிதாக உப ஒலிபரப்பு நிலையம்அமைக்கவும் தொழில் நுட்ப கருவிகள் பல அமைக்கவும் இந் நிதி பயன்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

---

## "மாணவர்களுக்கு ஆரம்பம் முதல் ஒழுக்கசீலமும் சமய அறிவும் போதிக்க வேண்டும்"

### சைவ மாநாட்டில் கருத்து

[அராலி]

''இன்றைய மாணவர்களில் பெரும்பாலானோர் சைவசமய அறிவு குறைந்தவர்களாகவே காணப்படுகின்றனர். இதற்குக் காரணம் இவர்களை நெறிப்படுத்தும் நோக்கமுள்ள நூல்கள் இன்று இல்லை. மாணவர்களைச்சிறு வயதிலிருந்தே நெறிப்படுத்த, நற்பிரஜைகளாக உருவாக்க அன்றைய பாடநூல்கள் பெரிதும் உதவின. பாலபாடம், பாலபோதினி முதலான நூல்கள் ஆரம்ப வகுப்புகளிலிருந்து மாணவர்களை ஒழுக்க சீலர்களாக உருவாக்கின. இதனால் மாணவர்களும் ஒழுக்க சீலர்களாக, சமயப்பற்று நிறைந்தவர்களாக விளங்கினர். இன்றைய மாணவர்களும் சமய உணர்வு மிக்கவர்களாக விளங்க நல்ல நூல்கள் வெளியிடப்படவேண்டும். இன்றேல் பழைய நூல்கள் மறுபிரசுரம் செய்யப்பட்டு இலவசமாக விநியோகிக்கப்பட வேண்டும். இந்த நன் முயற்சியில் தனவந்தவர்கள் ஈடுபட வேண்டும்.''

வட்டுக்கோட்டை கலா நிலைய ஆதரவில் வட்டுக்கோட்டை திருஞானசம்பந்த வித்தியாலயத்தில் நடைபெற்ற சைவ மகாநாட்டில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய யாழ்.பல்கலைக்கழகப் பேராசிரியர் கலாநிதி சி. பத்மநாதன் மேற்கண்டவாறு கூறினார்.

வட்டுக்கோட்டை கலா நிலைய முதல்வர் திரு. க. கயிலாயநாதன் தலைமையில் சைவமாநாடு நடைபெற்றது. பேராசிரியர் பத்மநாதன் மேலும் கூறியதாவது:

''எமது சைவசமயம் உலக சமயங்களில் மிகப்பழமை வாய்ந்தது என்பதை ஆங்கில ஆராய்ச்சியாளர்கள் பலர் ஆதாரங்களுடன் நிரூபித்துள்ளனர். மொகஞ்சதாரோ ஹரப்பா முதலான நகரங்களில் வாழ்ந்தவர்கள் சிவனை முழுமுதற்கடவுளாக வழிபட்ட தன்மையை இந்த ஆராய்ச்சியாளர்கள் தெளிவுபடுத்தியுள்ளனர்.

''உலகில் ஈடிணையற்ற சிந்தனையைத் தூண்டும் பாரம்பரியம் சைவத் தமிழ்ப் பாரம்பரியம் என்பதை நாம் மறுக்க முடியாது. இந்தப் பாரம்பரியமானது நெகிழ்ந்தும் வளைந்தும் செல்லக் கூடியது. இதனாலேயே இது எக்காலமும் அழியாது நிலைத்து வருகின்றது.

''விஞ்ஞானத்தில் முன்னேற்றமடைந்த செல்வம் கொழிக்கும் நாடான அமெரிக்காவிலேயே சைவ ஆலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அமெரிக்கர்கள் கூட இந்த

(7-ம் பக்கம் பார்க்க)

---

## பலதும் பத்தும்

### கடாபி விருது

மனித உரிமைகளுக்காகப் போராடும் வீரர்களுக்கான விருது ஒன்றை லிபிய ஜனாதிபதி கடாபி 1988 செப்டெம்பரில் ஏற்படுத்தினார்.

முதலாவது விருதைப் பெறுபவர் யார் தெரியுமா? தென்னாபிரிக்காவின் நிறக் கொடுமையை எதிர்க்கும் நெல்சன் மண்டேலா. வெள்ளையர்களின் பிடியிலிருந்து நமீபியா சுதந்திரம் பெற நாள் குறித்தாகிவிட்டது. அவர்களது விடுதலைக்காகவும் குரல் கொடுத்த மண்டேலா இவ்வேளையில் விருதுபெற இருப்பது வெகுபொருத்தம் தான்!

மண்டேலா நேரிற் சென்றுவிருது பெறுவாரா? கஷ்டம்தான்! ஏன் இருபத்தைந்து வருடங்களாகத் தென்னாபிரிக்கச் சிறையிலிருந்து வாடுகிறார் அவர்.

அவரது 75வது பிறந்த தினத்தன்று, மனைவியும்குடும்பமும் சிறைக்குச் சென்று சந்திக்கலாம் என விசேட அனுமதியை தென்னாபிரிக்கப் பிரதமமந்திரி போத்தா வழங்கியிருந்தார், ஏனைய கைதிகளுக்கில்லாத விசேட சலுகையா! அவர்கள் வரவே வேண்டாம் எனக் கூறிவிட்டார் மண்டேலா.

சர்வதேசத் தலைவர்கள்பலரைக் கொண்ட குழுவே மண்டேலாவின் பெயரைச் சிபார்சு செய்தது. இக்குழுவிற்கு எமது நாட்டிலிருந்து அழைக்கப்பட்டவர் யார்? சிறிமாவோ அம்மையார்! நாட்டு நிலைமைகாரணமாக அவர் போகமுடியவில்லை. யாம்!

வாணி

---

### மல்லாகம் கி. அ. சங்கம்

# மூன்று பாடசாலைகளுக்கு மல-சலகூட, குடிநீர் உதவி!

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கம், மல்லாகம் குளமன்கால் ரோமன் கத்தோலிக்க பாடசாலை மாணவர் நலன்கருதி 16 ஆயிரம் ரூபா செலவில் 3 மலகூடங்களைக் கட்டிக் கொடுத்ததுடன் ஏற்கனவே இருந்த ஒரு மலகூடத்தையும் ஆண்கள் சிறுநீர் கழிக்கும் கூடத்தையும் செப்பனிட்டுள்ளது.

மேலும் இப்பாடசாலைக்கு நியூசிலாந்து தூதராலயத்தின் உதவியோடு தண்ணீர்தாங்கியும், குழாய் நீர் வசதியும் கிராம அபிவிருத்திச் சங்கம் செய்து கொடுத்துள்ளது.

இத்தகவலை மேற்படி சங்கத்தின் தலைவர் திரு. சு. ஸ்ரீபாஸ்கரன் தெரிவித்துள்ளார்.

மல்லாகம் குளமன்கால் பாடசாலையில் சுமார் 400 மாணவ மாணவிகள் 10-ம் வகுப்புவரை கல்வி பயிலுகின்றனர். ஒருமலகூடம் சேதமடைந்த நிலையிலும், பெண்களுக்கான மலகூடம் பாவனைக்குதவாத நிலையிலும் இருந்தன. இதனால் மாணவர் படும்கஷ்டநிலைகளை நீக்கஉதவி செய்து தருமாறு பாடசாலை அதிபர் திரு. மரியதாஸ், மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவரிடம் விண்ணப்பித்திருந்ததற் கிணங்க மேற்குறிப்பிட்ட மலசலகூட, குடிநீர் வசதிகளை சங்க மூலமாகச் செய்து கொடுத்ததாக திரு. ஸ்ரீபாஸ்கரன் தெரிவித்தார்.

மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயத்தில், ஸ்ரீலங்கா இராணுவ நடவடிக்கையின் போது அமைக்கப்பட்ட கட்டிடம் ஒன்றுக்கு சிமெந்தினால் திருத்த வேலைகள் செய்ய 10 ஆயிரம் ரூபாவும் மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலையில் கிணற்றுக்கு கைப்பம்பு ஒன்றும் வழங்கியதாகவும் அவர் தெரிவித்தார்.

---

### பூஸா முகாமிலிருந்து விடுதலையான

# யாழ். மாவட்ட இளைஞர்கள் நிவாரண உதவியின்றி கவலை!

[பண்டத்தரிப்பு]

ஸ்ரீலங்கா இராணுவத்தினால் யாழ். மாவட்டத்தில் கைது செய்யப்பட்டு காலி பூஸா தடுப்பு முகாமிலிருந்து விடுதலை செய்யப்பட்ட யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞர்களுக்கு இதுவரை எவ்வித நிவாரண உதவிகளும் அரசாங்கம் வழங்கவில்லை என்று புகார் தெரிவிக்கப்படுகின்றது.

பண்டத்தரிப்பு, பனிப்புலம், சுழிபுரம் ஆகிய இடங்களைச் சேர்ந்த இந்த இளைஞர்கள் யாழ். அரசாங்க செயலகத்தில் கடந்த ஆண்டு நேரில் சென்று நிவாரணம் பெறுவதற்காக அதற்கான சான்றுப் பத்திரங்களைச் சமர்ப்பித்து விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்து கையளித்திருந்ததாகவும், விரைவில் நிவாரண உதவிகள் தரப்படும் என்று அங்கு தெரிவிக்கப்பட்டதாகவும் ஆனால் இதுவரை தமக்கு எவ்வித நிவாரண உதவியும் கிடைக்கவில்லை என்றும் இவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதேவேளை கிழக்கு மாகாணத்தில் பூஸா முகாமிலிருந்து விடுதலை செய்யப்பட்டவர்களுக்கு அங்குள்ள அரச செயலகங்கள் மூலம் நிவாரண உதவிகள் கிடைத்திருப்பதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இது இவ்வாறிருக்க பூஸா தடுப்புமுகாலில் வைக்கப்பட்டு குற்றமற்றவரென விசாரணையின் பின்பு விடுவிக்கப்பட்ட பனிப்புலத்தைச் சேர்ந்தகடற்படை ஊழியர் ஒருவருக்கு மீண்டும் அங்கு வேலை வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. காரைநகர் கடற்படையில் கடமையாற்றி வந்த அவர் மீண்டும் தமக்கு பழைய பதவி தரப்படவேண்டும் என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு விண்ணப்பித்ததாகவும் பல மாதகாலமாகியும் எதுவித பதிலும் கிடைக்கவில்லைஎன்றும் தெரிவிக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு விழா:

# ஆறு புதிய சாதனைகள்

(யாழ்ப்பாணம்)

''உள்ளத்தில் அமைதி ஏற்பட விளையாட்டுத்துறை எவ்வாறு முக்கியமானதோ, அதேபோல் ஒரு மாவட்டத்தில் அமைதி ஏற்படுமாகில், அதன் வளர்ச்சி தானுகவே விருத்தியடையும்.''

இவ்வாறு அண்மையில் கிளிநொச்சியில் நடைபெற்ற மாவட்ட விளையாட்டு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிறட் கூறினுர்.

கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். அமிர்தலிங்கம் தலைமையில், பரந்தன் இளைஞர் வட்ட மைதானத்தில நடைபெற்ற மெய்வல்லுநர் போட்டியில் ஆறு புதிய சாதனைகள் நிலைநாட்டப்பட்டன. இவ்விளையாட்டு விழாவில் பூநகரி, பளை, கிளிநொச்சி ஆகிய மூன்று உதவி அரசாங்க பிரிவுகளைச் சேர்ந்த 200-க்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர்களும், வீராங்கனைகளும் கலந்து கொண்ட[illegible] குறிப்பிடத்தக்கது.

இவ்விளையாட்டு விழாவுக்கு கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு அதிகாரி திரு. ஏ. எஸ். குணரட்ணம் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த வீரர்களும், வீராங்கனைகளுமே மேற்படி ஆறு சாதனைகளையும் நிலைநாட்டியது குறிப்பிடத்தக்கது. புதிய சாதனைகளை நிலைநாட்டியோர் விபரம் வருமாறு:

ரி. குருபன் (800 மீற்றர்), என். தெய்வேந்திரன் (நீளம் பாய்தல்), அன்ரன் அன்பழகன் (குண்டெறிதல்), எம். இம்மனுவல் (5000 மீற்றர்), என். நடனவடிவேல் (1,500 மீற்றர்), செல்வி ஏ. புஸ்பராணி (நீளம்பாய்தல்)

இவ் விளையாட்டுப் போட்டியில், அதிவேக ஓட்டவீரராக பளை உதவி அரசாங்க பிரிவைச் சேர்ந்த சி. பாஸ்கரனும், பெண்களுக்கான 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த செல்வி கா. சித்திராதேவியும் பரிசில்களைத் தட்டிக் கொண்டனர்.

மற்றைய போட்டிகளில் வெற்றி பெற்றோர் விபரம் வருமாறு:

மரதன் ஓட்டப் போட்டி: எம். இம்மனுவேல், வி. சிவநேசன், வி, பூபாலசிங்கம்.

சைக்கிள் ஓட்டப் போட்டி: (ஆண்கள்) எஸ். சின்னராசா, கே. நாகேந்திரன், எஸ். சிவானந்தராசா.

(பெண்கள்) செல்விகள். எஸ். செல்வராணி, ஈ. தயாநிதி, ஈ. புஸ்பவதனு.

வேகநடை: (ஆண்கள்) டி. கிருஷ்ணசாமி, வி. பாலேந்திரன், பி. சுரேஸ். (பெண்கள்) செல்விகள் த. மனேகரி, ஈ. தயாநிதி.

இவ்விளையாட்டு விழாவில் சிறந்த விளையாட்டு வீரராக என். தெய்வேந்திரனும், 'சிறந்த விளையாட்டு வீராங்கனையாக செல்வி. ஏ. புஸ்பராணியும் தெரிவு செய்யப்பட்டனர்.

எல்லே, வலைப்பந்தாட்டம், கரபந்தாட்டம் ஆகிய போட்டிகளிலும் கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவே வெற்றி பெற்றது.

கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவு 201 புள்ளிகளைப் பெற்று முதலாவது இடத்தையும், பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவு 75 புள்ளிகளைப் பெற்று இரண்டாவது இடத்தையும், பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவு 35 புள்ளிகளைப் பெற்று மூன்றுவது இடத்தையும் பெற்றன. (வி)

## மேட்டுநிலப் பயிர்ச்செய்கை:

# வடலி அடைப்பு 20 பேருக்கு ரூ. 16 ஆயிரம் கடனுதவி

(பண்டத்தரிப்பு)

வடலியடைப்பு கிராம அபிவிருத்திச் சங்கம், அதன் உறுப்பினர்கள் 20 பேருக்கு மேட்டுப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளுவதற்காக தலா 800 ரூபா வீதம் மொத்தம் 16 ஆயிரம் ரூபாவை கடனுதவியாக வழங்கவுள்ளது.

உலக தரிசன இயக்கம் முன்னர் இச்சங்கத்திற்கு வழங்கியிருந்த சுழற்சிமுறையிலான நிதி உதவியின் அடிப்படையில் இந்த கடனுதவி வழங்கப்பட விருப்பதாகவும், இதற்கான தீர்மானம் கடந்த 19ம் திகதி நடைபெற்ற சங்க செயற்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும், சங்கத்தலைவர் திரு, மு. சரவணமுத்து தெரிவித்துள்ளார்.

## தும்பளை இளைஞர் கனடாவில் விபத்தில் பலி

(பருத்தித்துறை)

பருத்தித்துறை தும்பளையைச் சேர்ந்த இளைஞரொருவர் கனடாவில் ஏற்பட்ட விபத்தொன்றில் பலியானுர். தும்பளை சைவப்பிரகாச மகா வித்தியாலய அதிபரான திரு. எஸ். சிவஞானசுந்தரத்தின் மகன் சிவச்சந்திரன் (வயது 31) என்பவரே விபத்தில் மரணமானவராகும்.

# "சிறுவர்களின் சிந்தனையை விளையாட்டுகள் தூண்டுகின்றன"

(யாழ்ப்பாணம்)

''சிறுவர்கள் என்ன செய்தாலும் அவை எமக்கு மகிழ்ச்சி தரும் செயல்களாகவே இருக்கும'' என்று கைதடி நவீல்ட் அதிபர் திரு. எஸ். ஜே. டேவிட் தெரிவித்தார்.

கைதடி சரஸ்வதி அறவழிப் பாலர் பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உலரயாற்றுகையிலே அவர் இவ்வாறு கூறினுர்.

பாலர் பாடசாலை அபிவிருத்திச் சங்கத் தலைவர் திரு. ப. செல்லத்துரை தலைமையில் நடைபெற்ற இவ் விளையாட்டுப் போட்டியில் திரு. எஸ். ஜே. டேவிட் மேலும் பேசுகையில் கூறியதாவது:

இன்றைய சிறுவர்கள்தான் நாளைய தலைவர்கள் எனவே இவர்களை சிறியவயதிலிருந்து நல்வழிப்படுத்த வேண்டியது அனைவரினதும் கடமையாகும்.

''இதற்காகத்தான் அறவழிப் போராட்டக்குழுவினர் தமது சார்பில் நடத்தும் பாலர் பாடசாலைகளில் வருடா வருடம் இல்ல விளையாட்டுப் போட்டிகளை நடத்துகிறுர்கள். சிறுவர்களிடையே சிந்தனையைத் தூண்டும் பணியில், விளையாட்டுப் போட்டிகள் படிக்கல்லாகத் திகழ்கின்றன''

அறவழிக்குழு செயலாளர் திரு. க. ஜீவகதாஸ், இயக்குனர் திரு. ச. தங்கராசா, திரு. க. இராமலிங்கம், கைதடி சனசமூக நிலையங்களின் ஒன்றியத் தலைவர் திரு. இ. கந்தசாமி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். பாடசாலை ஆசிரியை திருமதி ரி. வனிதா நன்றி கூறினுர்.

## புதிய நிர்வாகிகள்

(புலோலி)

நாகர்கோவில் அமெரிக்க மிஷன் பாடசாலை அபிவிருத்திச் சங்கக் கூட்டம் அதிபர் ஆ. வடிவேலு தலைமையில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் ஆ. வடிவேலு (அதிபர்), செயலாளர் பெ. பூபாலசிங்கம், உப செயலாளர் தெ. கந்தசாமி, பொருளாளர் வே. அம்பலவாணேசர். இத்துடன் ஐவர்கொண்ட செயற்குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.


# யாழ்ப்பாணம் சாயிரவல்ஸ் அன் ரூர்ஸ் நிறுவனத்தினர்

# வெளிநாட்டுப்பயணங்களை நாடிநிற்கும் மக்களுக்கான விசேட செய்தி!

O எமது யாழ்ப்பாண கிளை நிறுவனத்தின்மூலம் சில தினங்களுக்குள் கனடா, லண்டன், ஜேர்மனி போன்ற நாடுகளுக்கு தொழில் நிமித்தம் சென்ற பலரில் ஒரு சிலரின் விருப்பத்தின் பேரில் அவர்களது பெயர்களை இங்கு பிரசுரிக்கின்றேம்.



திரு. சிகாமணி
பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்
அச்சுவேலி



திரு. தவராஜா
கொக்குவில்.



திரு. மாணிக்கவாசகர்
கணக்காளர்
கொழும்பு.



திரு. லீன்சுப்பு
ஜெயராசா
பெரிய கோவிலடி யாழ்ப்பாணம்.



திரு. சிவநாதன்
கண்டி வீதி, பளை.

ஜேர்மன் லண்டன் பயணம் மேற்கொள்ள விரும்புவோர் எமது நிறுவனத்துடன் தொடர்புகொண்டு, உங்கள் பயணத்தை இலகுவாகவும், பாதுகாப்பாகவும் ஒழுங்கு செய்து கொள்ளுங்கள்.

## நம்பிக்கைக்கு உத்தரவாதம் அளிக்கின்றேம்.

எச்சரிக்கை: எமது நிறுவனத்தின் பெயருக்கு களங்கம் ஏற்படுத்தி, வீண் வதந்திகள் பரப்புவோர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

ஜேர்மனி, லண்டன் பயண ஒழுங்குகள் எந்த (TRANSIT) இன்றி நேரடி விமானத்தில் அனுப்பிவைக்கப்படும்.

எமது சேவையைப்பெற நாடவேண்டிய முகவரிகள்

# சாயி ரவல்ஸ் அன் ரூர்ஸ்

24/1, பெரியகடை, :: :: யாழ்ப்பாணம்.

தலைமையகம்! இல. 33. 1ம் மாடி. புதிய ஜெமினி கொம்பிளெக்ஸ் (ஜெமினி ஸ்ருடியோவை உள்ளடக்கியது).
602, மவுண்ட் ரோட், [illegible] போன்: 475382

(பி 310)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியாழ மாற்றம் உங்களுக்கு எப்படி?

எண் சோதிடர் எஸ். சி. எஸ். சிதம்பரநாதன்

(வியாழ மாற்றம் வாக்கிய பஞ்சாங்கப்படி 29 – 6 – 1989, திருக்கணித பஞ்சாங்கப்படி 2 - 7 – 1989 இடம் பெறுகிறது. குருபகவான் இடப ராசியில் இருந்து மிதுன ராசிக்குப் பிரவேசிக்கிறர்)

ஒருவர் வாழ்க்கையில் நற்பலன்கள் ஏற்பட குருபலன் என்று வருமோ என்று கூறுவது வழக்கமாகும். எனவே குருதேவரின் ரசி மாறுதல் மகிழ்ச்சிக்குரிய நிகழ்ச்சியேயாகும். எனினும் அனுபவத்தில் சந்திர ராசி ரீதியாக வியாழபகவான் சிலராசிகளில் சஞ்சரிக்கும் போது விசேஷ நன்மைகளும், சிலராசிகளில் சஞ்சரிக்கும்போது சங்கடமான பலன்களும் ஏற்படுவதை சோதிட சாஸ்திரம் தெளிவாக்குகின்றது. எந்தெந்த ராசிகளில் பிறந்தவர்களுக்கு என்னென்ன நன்மை திமைகளும், லாப நட்டங்களும், ஏற்றத் தாழ்வுகளும், சாதக பாதகங்களும் ஏற்படுமென்பதை ''ஈழநாடு'' வாசகர்களுக்கு தெளிவுபடுத்துவதற்கே இதனை எழுதுகிறேன்.

ஒன்பது கிரகங்களுள் குரு பகவானுக்குத் தனிச்சிறப்புகள் உண்டு. இயற்கையாக நல்லவர். காக்கும் குணம் இவரது பிறவிக்குணம். ஒருவருடைய ஜாதகத்தில் இவர் பலவீனமாக இருந்தாலும் கூடக் கேடுவிளைவிப்பதில் அளவோடு இருப்பார். இவரால் பார்க்கப்படுகின்ற கிரகங்கள் பலம் பெறும். குருவால் பார்க்கப்படுகின்ற ராசிகளின் பலமும் கூடுதல் அடையும். ''குருபார்த்தால் கோடி குற்றம் நீங்கும்'' என்பது சோதிடப்பழமொழி. உங்களின் ஜாதகத்தில் வியாழன் பலமுடையவரென்றல் அவர் நன்மை செய்ய வேண்டியவராவார். அப்படி நன்மை செய்ய வேண்டிய கடமையுடன் இருப்பவரான குரு, கோசார சஞ்சாரப்படி பலமாக இருந்து விட்டால் இரட்டிப்பு யோகம் ஏற்படத் தடையிருக்காது. நல்லதெசா புத்திகள் நடந்தால் இந்தயோகம் கூடுதலாகும். சாதகத்தில் குரு பலவீனமான இருந்து, கோசாரப்படியும் பலமில்லாது, மகாதெசா புத்தியும் அனுகூலமில்லாதிருந்தால் சோதனை தான்! இப்படிப் பலவகைப்பட்ட விதிமுறைகள் இருக்கின்றன. அவற்றைக் கணித்து, ஒவ்வொருவருக்கும் விசேடமான பலன்களைத் தருவதற்கு வாய்ப்பில்லை. எனவே பொதுவாக குருப்பெயர்ச்சியால் நடக்கும் பலாபலன்களை ஆராய்ந்து ராசி ரீதியாக தருகின்றேன். ஒன்றை மட்டும் கவனமாக நினைவில் வைத்துக்கொள்ளுங்கள் அதாவது உங்களுக்கு தற்பொழுது யோகமான தெசாபுத்தி நடக்குமாலுல், கோசாரப்படி குரு பெயர்ச்சிப் பலன்கள் பாதகமாக இருந்தாலும், அவை அவ்வளவாக உங்களைப்பாதிக்கும் என்று சொல்வதற்கில்லை. தெசாபுத்தியும் அனுகூலமின்றி, வியாழ மாற்றமும் துரதிர்ஷ்டமாக இருக்கும் போதுதான் பாதிப்பு அதிகமாகும். வியாழ பகவானின் பேராதரவைப் பெறுவதற்கு, வியாழக்கிழமை விரதம் அனுஷ்டித்து, அவருக்கு அர்ச்சனை செய்யுங்கள் எல்லாம் வல்ல கண்ணனின் பேரருளோடு பன்னிரு ராசிகளின பலன்களை ஆராய்வோம்.

## மேடம்

அச்சுவினி. பரணி, கார்த்திகை 1ம் பாதம்.

மேடராசியில் சந்திரன் இருக்கப் பிறந்த மேடராசிக்காரரான உங்களுக்கு குரு பகவான் 3ம் வீட்டிற்கு பிரவேசிக்கிறர். சுகமும், சௌகரியமும், மன அமைதியும் குறையும், ஆத்ம நண்பர்களாக இருந்தவர்கள் பிரிந்திடுவர். தொழிலிடம் வேறு இடமாகும். செலவு மிகுதியாக ஏற்படும். ஒரு சிலர் நீரழிவு, சுவாச நோய் போன்றவற்றல் அவதியுற்று, மருத்துவ மனையில் சில நாட்கள் தங்கிச் சிகிச்சைபெற இடமுண்டு. சிறுசிறு ஆதாயம் இருப்பினும் சிக்கல்கள் தோன்றும். நீதிமன்ற விவகாரங்களில் ஈடுபடவும், குடும்ப ஆரோக்கியம் பாதிப்படையவும் வாய்ப்புண்டு முயன்ற காரியங்களில் பலிதக்குறைவும், இடையூறுகளும் ஏற்படும். செய்யும் தொழிலை விட்டு வேறு தொழிலில் ஈடுபடலாம் என்ற எண்ணம் தோன்றும். பெற்றேருக்கு ஆகாது. பணவசதி குறையும். தாம்பத்திய வாழ்க்கையில் ஒற்றுமை குறையும். எது எந்த நிலையில் இருந்தாலும் புகழ் மங்காது. உத்தியோகத்தர்களுக்கு அலைச்சல் அதிகமாகும். எதிரிகளின் தொல்லை, அதிருப்திகரமான சூழ்நிலையை உருவாக்கும். வியாபாரிகளுக்கு மூலநிதி முடங்கிவிடும். எதிர்பாத்த அளவுக்கு பலிதம் ஏற்படுவது கடினம். மிகமிக கண்ணும் கருத்துமாய் இருத்தல் அவசியம். பெண்களுக்கு ஆரோக்கியம் தளரும். பிள்ளைகளுடைய, கணவனுடைய உடல்நிலை உங்களுக்குப்பெருங் கவலையளித்திடும். இனபந்துக்களிடத்தில் வீண் மனஸ்தாபம், பொருட்சேதம் ஏற்பட இடமுண்டு. திருமணம் பெரு முயற்சியின் பின் நடந்தேறும். விவசாயிகளுக்கு ஏமாற்றமான காலம். மகாதெசை புத்தி அனுகூலமாயின் நன்மைகளும் இடம் பெறும்.

## இடபம்

கார்த்திகை 2' 3, 4 பாதம், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2 பாதம்.

இடபத்தில் சந்திரன் இருக்கப் பிறந்த இடபராசிக்காரரான உங்களுக்கு குருதேவர் 2ம் வீட்டில் நுழைகிறர், சென்ற காலத்தில் பட்ட கஷ்டங்கள், துன்பங்கள், இடையூறுகள் யாவும் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கிவிடும். இளைத்த சரீரம் கூட செழிப்படையும். நிதி மிகுந்தோரின் ஆதரவு கிட்டும். வர வேண்டிய பொருளும், பணமும் தேடிவரும். கடன் யாவும் தீர்கப்படும். குடும்பத்தில்ஏற்பட்ட குழப்பம் அகன்று நல்ல சூழ்நிலை ஏற்படும். குடும்பத்தைப் பிரிந்தவர் ஒன்று கூடுவர், திருமணமாகாதவாகளுக்கு திருமணப் பேறு உண்டாம். சந்தான விருத்தியும், உறவினர், நண்பர் உதவியும் கிட்டும். கல்வித் துறையில் முன்னேற்றமுண்டு. உயர்கல்விச் சிறப்பு ஏற்படும். பெரியமனிதர் ஆதரவு என்றும் உண்டு. சமூக வட்டாரத்தில் உங்களுககு நல்ல செல்வாக்கு உருவாகும். எத்தகைய தொழிலிலும் நல்ல பலிதம் ஏற்படும், உத்தியோகத்தர்களுக்கு சிறப்பும், மேன்மையும் கிடைக்கும். தம்மைச் சார்ந்தவரையும் உயர்த்துவதில் கருத்தைச் செலுத்துவர். பொருள் வளமும், பணவசதியும் பலமாக அமையும். வியாபாரிகளுக்கு உயர்ந்த ஆதாயம் காட்டும். புதியமாறுதல்களும், தொழில் விஸ்தரிப்பும் உண்டாம், பெண்களுக்கு ஆரோக்கியம் செழிப்படையும். கல்வி வளரும், கவலைகள் [illegible] இல்லற வாழ்க்கையில் மலர்ச்சி ஏற்படும். ஆடை ஆபரண சேர்க்கையும், சந்தான விருத்தியும் மகிழ்ச்சியூட்டும் நிகழ்ச்சிகளாகும். வவசாயிகளுககு விசேடமான காலம். மகாதெசாபுத்தி அனுகூலமில்லவிடில், கஷ்டங்கள், துன்பங்கள் கலந்தே இருக்கும்.

## மிதுனம்

மிருகசீரிடம் 3ம், 4ம்பாதம், திருவாதிரை புநர்பூசம் 1,ம் 2ம், 3ம் பாதம்.

மிதுனத்தில் சந்திரன் இருக்கப் பிறந்த மிதுனராசிக்காரரான உங்களுக்கு வியாழபகவான் ஜென்மத்திற்கு, அதாவது 1ம் வீட்டில் சஞ்சரிக்கத் தொடங்குகிறர். உங்களுக்கு வனவாசத்திற்கு ஒப்பான வாழ்க்கையும், உங்கள் இஷ்டத்திற்கு மாறுபட்ட நிகழ்ச்சிகளும் அதிருப்திகரமான சூழ்நிலைக்குள்ளாக்கும். எத்துறையிலும் விரக்தி மனேபாவம் இருக்கும். நீங்கள் ஒன்று நினைக்க வேறென்று நடக்கும். உங்கள் கையே உங்களுக்கு ஊனமாகும். அலைச்சல் மிகுதியாலும் அகால உணவாலும் சரீரம் இளைத்துவிடும். உடல் பலவீனமடையும். நல்ல பணவசதி இருந்தாலும் தற்காலிக வசதி குன்றியவர்களாகவே இருப்பீர்கள். குடும்பத்தில் பொறுப்பு அதிகரிக்கும். பணமுடை ஏற்படும். மனைவி மக்களின் ஒற்றுமை குன்றும். கல்வியில் பின்னடைவுதோன்றும். ஒருசிலர்அரைகுறையாக படிப்பை நிறுத்திக்கொள்ளவும் கூடும். உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றம் அல்லது பதவி மாற்றம் காத்திருக்கிறது. அலுவலகத்தில் அமைதியின்மை, சக ஊழியர் தொல்லை என்பன நடக்கும். வியாபாரிகளுக்கு போட்டியும். சூழ்ச்சியும் பொருமையும் நிறைந்து காணப்படும். எக்காரியமானுலும் தடைகளும், இடைஞ்சல்களும் உண்டு. பெண்களுககு உடற்பிணி மட்டுமன்றி மனப்பிணியும் உண்டாம். நெருங்கிய உறவினர் பிரிந்திடுவர். முன்னெச்சரிக்கை அவசியம். ஒரு கவலை மறைய மற்றைய கவலை தொடரும். திருமணங்கள் தடைப்படும். விவசாயிகளுக்கு உகந்த காலமல்ல. மகாதெசா புத்தி அனுகூலமாயின் நன்மை சிறிது கிட்டும்.

## கடகம்

புநர்பூசம் 4ம் பாதம், பூசம், ஆயிலியம்.

கடகத்தில் சந்திரன் இருக்கப் பிறந்த கடகராசிக்காரரான உஙகளுக்கு குருபகவான் 12-ம் வீட்டில் நுழைகிறர். இதுகாலவரை இலாபஸ்தானத்தில் இருந்த வியாழன் விரயஸ்தானத்தில் சஞ்சரிக்கத் தொடங்குகிறர். உங்களுக்கு எதிர்பாராத செலவுகள் காத்திருக்கின்றன. அலைச்சலாலும், வேலைப் பளுவாலும் உடல் இளைத்துவிடும். மனக்கவலையும், கடன் உபாதையும் ஏற்படுமேயன்றி, நோய்களேதும் கடுமையாக வாட்டுவதற்கில்லை. பிறருக்குக் கொடுத்த கடனையும் வசூலித்து செலவு செய்யவேண்டி வரும். குடும்பத்தில் சோர்வும், பிணிவாட்டங்களும் இதனுல் சங்கடமும் அவ்வப்போது தோன்றும், குடும்பத்தினரால் உங்களுக்கு எவ்வித வசதியும் ஏற்படாது. கல்வி வளர்ச்சியடையும். தொழிற் பயிற்சியும் சிறந்த முறையில் உண்டாகும். திருமணம் பெருத்த பிரயாசையின் பின் நடந்தேறும். உத்தியோகத்தர்களுக்கு [illegible] இடத்திற்கு இடமாற்றம் ஏற்பட வாய்ப்புண்டு. காரியாலயத்தில் சுமுகமான நிலை இருந்தாலும் சிலர் குழிபறிக்கக் காத்திருப்பர் உங்களில் சிலர் குடும்பத்தைப் பிரித்து வெளியூரில் இருக்கவும்வாய்ப்புண்டு. வியாபாரிகளுக்கு அதிக மூல நிதித்துறைகள் பலவிதமாகாது. விலைவாசிகள் ஏற்றத் தாழ்வினுல் எதிர்பாராத நட்டங்கள் ஏற்படும். கூட்டு வியாபாரம் செய்தவர்கள் பிரிய இடமுண்டு. பெண்களுக்கு உடல்மெலிவு, அவப்பெயர் கேட்டல், கலைவளர்ச்சியில் முன்னேற்றம் உண்டு. உங்களது பொருளும் நகையும் பணமும் பிறருக்கு உபயோகப்படும். விவசாயிகளுக்கு மத்திம பலன் செய்யும். மகா தேசா புத்தி அனுகூலமாயின் நன்மையும் கலந்துநடக்கும்.

## சிங்கம்

மகம், பூரம், உத்தரம் 1ம் பாதம்.

சிங்கத்தில் சந்திரன் இருக்கப் பிறந்த சிங்கராசிக்காரரான உங்களுக்கு குருதேவர் 11ம் வீட்டிற்கு இடம்பெயருகிறர். வியாழன் பத்தாமிடத்தை விட்டு லாபஸ்தானமாகிய பதினேராம் இடத்திற்கு அடி எடுத்து வைக்கிறர். பதவி; அந்தஸ்து, கௌரவம், செல்வாக்கு முதலியவை சிறந்து விளங்கும். பணமுடை நீங்கி, பொருள்வளம் பெருகிட நல்ல ஆதாயம் ஏற்படும். அரச ஆதரவு நிலைத்திடும். குடும்பம் விருத்தியடையும். தெய்வ அனுக்கிரகமும், லஷ்மி கடாட்சமும் உண்டாகும். பூமி லாபமும், வீடு-வாகன வசதிகளும் நன்மையும். மனைவி மக்களின் பெருமை, நணபர்கள் ஆதரவு நிச்சயம் உண்டு. திருமணமாகாதவர்களுக்கு நல்ல இடத்தில் விவாவகம் நடைபெறும். செய்யும் தொழிலில் முன்னேற்றமுண்டு. தாம்பத்திய வாழ்க்கையில் ஒற்றுமை ஏற்படும். ஆரோக்கியம் சிறந்து விளங்கும். வரவேண்டியவை உங்களைத்தேடி வந்தடையும். சந்தான பாக்கியத்திற்கும் வாய்ப்புண்டு. உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வு, சம்பள உயர்வு உண்டாம். உங்கள் திறமை மேலோர் கவனத்தைக் கவர்ந்து, அரிய பெரிய பொறுப்பான ஸ்தானங்களை வகிக்கக்கூடிய அந்தஸ்தை அடைவீர்கள். அயல் நாடு சென்று வரும் சந்தர்ப்பமும் உண்டு. வியாபாரிகளுக்கு நல்ல ஆதாயம் ஏற்படும். லாபம் கிட்டுவதோடு சேமிப்பும்பெருகும். தொழில் விஸ்தரிப்புக்கும் இடமுண்டு.

பெண்களுக்கு கணவனின் உயர்வும், இல்லத்தி மங்கள காரியங்களும் மனமகிழ்ச்சியைத் தரும். பணவசதி நன்கு அமையும். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டாகும். விவசாயிகளுக்கு பலதும் பெருகிடும். வாகன சேர்க்கை ஏற்படும். மகா தெசாபுத்தி அனுகூலமில்லாவிடில் தீமைகளும் கலந்தே காட்டும்.

## கன்னி

உத்தரம் 2, 3, 4-ம் பாதம் அத்தம், சித்திரை 1-ம்2-ம், பாதம்.

கன்னியில் சந்திரன் இருக்கப் பிறந்த கன்னிராசிக் காரரான உங்களுக்கு வியாழ பகவான் 10-ம் வீட்டில் பிரவேசிக்கிறர். குருதேவர் இது வரை பாக்கியஸ்தானமாகிய ஒன்பதாம் இடத்தில் நடைபுரிந்து பத்தாம் இடத்திற்கு நுழைகிறர். தொழிற்றுறையிலும், சமூக வட்டாரத்திலும், பணம் சமபந்தப்பட்ட விஷயங்களிலும் மந்தமான நிலை தோன்றி உங்கள் உற்சாகத்தைக் குறைத்து விடும். நீங்கள் ஒன்று நினைத்தத் திட்டங்களை வகுத்திட தெய்வச்செயல் வேறென்ருக முடியும். தொழிலில் அலைச்சல் மிகும். சில முக்கியமான பிரச்சினைகள் வலுவாகி சிக்கலான கட்டத்தை அடைந்துவிடும். சகோதரர், உறவினர் ஆதரவு குறையும். மனைவியின் ஆரோக்கியம் குறையும், வாயு சம்பந்தமான நோய்கள், மூலம் போன்ற நோய்கள் உடலை வாட்டும். பணமுடை பெரிதும் பாதிக்கும் கடன் தரவும் ஆள்கிடைப்பதரிது. புத்திரரால் வீண்கவலைகள் உண்டாகும். உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றம், தொழில் மாற்றம் ஏற்படவும் வாய்ப்புண்டு, சக ஊழியரின் சூதில் மாட்டிக் கொள்ள நேரிடும். எச்சரிக்கையாயிருத்தல் மிகஅவசியம். வியாபாரிகளுக்கு அதிருப்திகரமான மனேபாவம் உண்டாகும். தொழிலை மாற்றியமைக்க மனம் ஏவும். உங்கள் கொள்முதல் ஸ்தானங்களை மாற்ற முனைவீர்கள். வியாபாரம் மந்தமடையும். பெண்களுக்கு பிரயாணத்தால் அசதியும், மக்களால் கவலையும், மனேவியாகூலமும் உண்டாகும், கலைத்துறையில் உற்சாகம் காட்டும், செலவினங்கள் பெருகிடும். குடும்பத்தில் சிலதருணங்களில் மனக்கசப்பு உண்டாகும். விவசாயிகளுக்கு பாதகமான காலம் மகாதெசா புத்தி அநுகூலமாயின் நன்மைகள் சேந்து வரும்.

(மிகுதி நாளை வரும்)

## வருடாந்த உயர் திருவிழா

[புலோலி]

புங்குடுதீவு அருள்மிகு அந்தோனியார் ஆலய வருடாந்த உயர் திருவிழா அடுத்த மாதம் 7, 8, 9ம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இத்திருவிழாவின் போது பூசைப்பலி, நற்கருணை திருவிருந்து, அந்தோனியார் தேர்ப்பவனி பக்தர்களுக்கு புனிதரின் அருளாசி என்பன இடம்பெறும்.

## சேவைநலம் பாராட்டு வைபவம்

(வண்ணார்பண்ணை)

யாழ்ப்பாணம் தபால் நிலையத்தில் கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக தபால் பரிசோதகராகவும், சிரேஷ்ட தபால் பரிசோதகராகவும் சேவையாற்றி ஓய்வு பெற்றுள்ள திரு. பா. அருள்ராஜாவுக்கு யாழ். தபால் தந்தி ஊழியர்கள் பிரிவுபசாரக்குழு சேவைநலம் பாராட்டு விழாவொன்றை நடத்தியது.

யாழ். பிரதம தபாலக மண்டபத்தில் மேற்படி குழுவின் தலைவர் திரு. அ. யோசேப் தலைமையில் நடந்த இவ்வைபவத்தில் யாழ். பிரதம தபாலதிபர் திரு. சு. பரராசசிங்கம் உட்பட பலர் திரு. அருள்ராஜாவின் சேவையைப் பாராட்டிப் பேசினர்.

## கண்காணிப்பு அவசியம்

(பருத்தித்துறை)

''பிள்ளைகளின் கல்வி அபிவிருத்தி மேம்பாட்டு நடவடிக்கைகளுக்கு பெற்றேர், ஆசிரியர்கள், நலன் விரும்பிகள் ஆகியோர் இணைந்து ஒரு குடும்பம் போல செயற்படவேண்டும். பிள்ளைகளின் ஒவ்வொரு நடவடிக்கைகளையும் பெற்றேர் கண்காணித்துக்கொள்ள வேண்டும்''

இவ்வாறு பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கி உரையாற்றிய வித்தியாலய அதிபர் திரு. வி. எஸ். ஏகாம்பரநாதன் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:-

பெற்றேர்கள் பிள்ளைகளைப் பாடசாலைகளுக்கு அனுப்பி விட்டால் மட்டும் போதும் எனக் கருதிவிடக்கூடாது பிள்ளைகளின் கல்வி அபிவிருத்தி, பாடசாலைகளின் வளர்ச்சிகளுக்கும் தம்மாலான பங்களிப்புகளை வழங்கவேண்டும். பெற்றேர்கள் சிறப்பாக இயங்கும்போதுதான் எதிர்காலத் தலைவர்களான இன்றைய பிள்ளைகள் நற் பிரஜைகளாக உருவாகி வாழ்க்கையில் வெற்றியடைய முடியும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இராசி பலன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

உல்லாசப்பயணம், குடும்பச் சிறப்பு, புகழ்.

சிங்கம்:- காரியத்தடை, அதிகாரிகள் தொல்லை, எதிர்பாராத தொல்லை, களவு போதல், ஏக்கம்.

கன்னி:- பகைத்துக்கொள்ளல், பொருளாதாரத் தொல்லை, மனைவியுடன் வீண் மனஸ்தாபம், அகந்தை,

துலாம்;- மனைச் சிறப்பு, பிரிந்தவர் கூடுவர், பயணங்களால் பணவரவு, தொழில் லாபம், கடித உறவு.

விருச்சிகம்:- கல்வி மேன்மை, அந்நியருதவி, குடும்பத்தில் உல்லாசம், வாகன யோகம்.

தனுசு:- சிறுபிணி, அந்நியப்படுதல், பொய் பேசுதல், வாக்கு விரோதம், தொழில்நஷ்டம், அவமானம்.

மகரம்:- வீண் மனஸ்தாபம், குடும்பப் பிரிவு, பெண் தொல்லை, வேலைப்பளு, கனச்சுமை, செலவு.

கும்பம்:- பயணங்களால் நன்மை, எதிர்பாராத பணவரவு, விருந்துபசாரம், மக்களால் பெருமை.

மீனம்:- குடும்பத்தில் சிக்கல், பணமூலமான கவலை, எதிரிகள் தொல்லை, ஏமாற்றம், அந்நிய வாசம்.

## மாணவர்களுக்கு

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆலயத்திற்குச் சென்று வழிபட்டு வருகின்றனர். இத்தகைய சிறப்பு வாய்ந்த சைவ சமயத்தின் உன்னத நிலை இன்று இலங்கையில் இல்லை. ஏன்? வட்டுக்கோட்டையிலேயே இன்றைய சைவ மாநாட்டுக்கு வந்திருந்த மக்கள் தொகை இந்த நிலையை எடுத்துக்காட்டுகிறது.

''அறம் பற்றிய, தர்மம் பற்றிய சிந்தனைகளை இன்றைய மாணவர்களிடம் காணமுடியவில்லை. காரணம் அவர்களுக்கு வழங்கப்படும் பாடப்புத்தகங்கள் பொருத்தமற்றவை என்றே சொல்லலாம். எனவே நல்ல சிந்தனைகளை உருவாக்கும் நூல்கள் எழுதப்பட வேண்டும்.

''சைவசமயத்தில் பற்றுள்ளவர்களை அறிவுள்ளவர்களை யாரும் மதமாற்றம் செய்ய முடியாது. சைவ சமயத்தவர்களை சமய மாற்றம் செய்த காலத்தில் தான் ஆறுமுக நாவலர் தோன்றினர். சைவ நூல்களை ஆக்கி சைவப் பாரம்பரியத்தையும் அவர் பேணிப்பாதுகாத்தார். இலங்கையில் சைவசமயம் இன்று நிலைத்து நிற்பதற்குக் காரணமாக இருந்தவர் ஆறுமுக நாவலரே என்று கூறலாம்.

### பட்டிமன்றம்

''இன்றுள்ள சைவநடைமுறைகளில் திருத்தம் அவசியம்'' என்ற பொருளில் நடைபெற்ற பட்டிமன்றத்திற்கு கலாநிதி சி. சிற்றம்பலம் தலைமை தாங்கினர். பண்டிதர் க. மயில்வாகனம், புலவர் க. தேவதாசன் ஆகியோர் ஆதரித்தும் பண்டிதை பொன் பாக்கியம், திருவாட்டி நாச்சியார் செல்வநாயகம் ஆகியோர் எதிர்த்தும் பேசினர். திருமுறை இசை அரங்கில் பண்ணிசைப் புலவர் திரு. வே. சிவஞானம் திருமுறைகளைப் பாடினர்.

**ஹரன் சினிமா**
(யாழ்ப்பாணம்)
4-வது வெற்றி வாரம்
சத்தியராஜ்—நதியா நடித்த
**சின்னத்தம்பி பெரியதம்பி**

**நியூசாந்தி** யாழ்நகர்
10-30, 2-30 மணிக்கு
விஜயகாந்த் — பூர்ணிமா
சங்கிலிமுருகன்
**சட்டம் ஒரு இருட்டறை**
(ஈஸ்ட்மன் கலர்)

# கூச்சலும் குழப்பமும் நிறைந்த பாராளுமன்ற அமர்வு!

— சபையிலிருந்து நமது நிருபர் ஸி.துவான் நவீர் —

கடந்த வாரம் நடந்து முடிந்த பாராளுமன்ற கூட்டங்களிலும் கூச்சலும் குழப்பமும் நிலவின. அரசின் அதி உயர் அமைப்பான பாராளுமன்றத்தில் ஜனநாயக ரீதியிலான வாக்குவாதங்களும், பேச்சுக்களும் நடைபெறுவது நியாயப்படுத்தக் கூடியதாக இருந்த போதிலும் அனுவசிய கூச்சல்களும், தேவையற்ற மரியாதைக்குறைவான வார்த்தைகளும் பாராளுமன்ற ஜனநாயக மரபுகளையும் அதன் கௌரவத்தையும் இழிவுபடுத்தும் என்பதே மூத்த அரசியல் தலைவர்களின் கருத்து.

இப்பாராளுமன்றக்கூட்டம் 'மருதானை மீன்மார்க்கட்' போல் உள்ளது என ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர் ஜனப் ஹலீம்இசாக்கும் 'புறக்கோட்டை சந்தை'' மாதிரி உள்ளது: என ஐக்கியதேசியக் கட்சி எம். பி. ஒருவரும்தெரிவித்தனர்.

அந்தக்கூட்டத்தில் இடம் பெற்ற முக்கிய விவாதங்கள் வருமாறு:

ரிச்சாட் பத்திரான (சுதந்திரக்கட்சி) இன்று விண்விரயத்தைப்பற்றி அரசு பேசுகிறது நமது ஜனதிபதிக்கு எத்தனை வாகனங்கள்இருக்கின்றனவோ தெரியாது? எம். பி. மார்களுக்குத்தான் எத்தனை வாகனங்கள்.

சபாநாயகர்: (குறுக்கிட்டு) ஆனல் எனக்கு இருப்பது ஒரு கார் மட்டுமே.

பத்திரான: சபாநாயகர் அவர்களே உங்களைப்பற்றி நான் ஒன்றும் கூறமாட்டேன் நீங்கள்இன்னும்ஓரிரு கார்களை வாங்குங்கள், (சிரிப்பு)

சபாநாயகர் அவர்களே நீங்கள் இப்போது போகும்அந்தக்காரிலே இனிமேல் போகாதீர்கள் அந்தக்கார் மிகவும் துரதிர்ஷ்டம்பிடித்தது. அதில் போன எந்த சபாநாயகரினதும் பதவியும் நிலைத்ததில்லை ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் போனர். அவருக்கு என்ன நடந்தது. பாக்கீர் மார்க்கார் போனர் ஆனல் சில காலம் தான் அதில் போகமுடிந்தது. அதற்குள் பதவி பறிபோய் விட்டது, (கூச்சல் சிரிப்பு)

அஸ்வர்: (குறுக்கிட்டு) பாக்கீர் அதில் பிரயாணம் செய்ய வில்லை.

பத்திரான: அதனல் தான் அவருக்கு கவர்னர் பதவி கிடைத்திருக்கிறது போலும். (சிரிப்பு)

பத்திரான: திறந்த பொருளாதார நிலையை அரசு நீடிக்குமா?

அரசுதரப்பில் ஒருகுரல்: திறந்த பொருளாதாரத்தை எதிர்ப்பதில்லை விமர்சிப்பதில்லை என அனுராபண்டாரநாயக்கா பத்திரிகைக்குப் பேட்டி கொடுத்துள்ளார்.

இன்னுமொருகுரல்: ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கு பொருளாதாரக் கொள்கை என்று எதுவும் இல்லை.

அஸ்வர்: (குறுக்கிட்டு) எத்தனையோயுவதிகளுக்கும் நாம் வேலைகொடுத்துள்ளோம்.

(சிரிப்பு)

பத்திரான: சிங்கள மன்னர் காலத்துல் மிகப் பிரபலமான ஒருவர் இருந்தார் அவர் தான் அந்தரே என்பவர். அவர் எப்படி இறந்தார்தெரியுமா?

கால்கைகளை விரித்துப்போட்டபடி பெட்டியில் போட்டு அடக்கம் செய்ய முடியாத நிலையில்தான் இறந்தோர். அப்படிப்பட்ட அந்தரே இப்போது மறுபிறவி எடுத்து இந்தப் பாராளுமன்றத்துக்கு வந்துள்ளார். (சிரிப்பு)

அஸ்வர்:- [(ஆத்திரத்துடன்) அந்தரேயைப் போல [illegible] தேவையில்லாத விடயங்களைப் பேசுபவர் நீங்கள்தான் (கூச்சல்).

பத்திரன:- அந்த அந்தரேயுக்கு பிற்காலத்தில் இந்த பாராளுமன்றத்தில் முன்வரிசையில் அமர்ந்து கொள்ள வாய்ப்பு கிடைக்க வேண்டும் என வேண்டிக் கொள்கிறேன், (சிரிப்பு).

தேவையானல் நாம் கையெழுத்திட்டுஜனதிபதிக்கு பெட்டிசனும் அனுப்பி வைக்கிறேம். (பலத்த சிரிப்பு)

### உலக வங்கியின் போக்குக்கு அரசு ஆடுகிறது

அத்தாவு செனவிரத்ன:- (ஐக்கியசோஷலிஸமுன்னணி) நாணய மதிப்பிறக்கம் செய்யும் உலக வங்கி சொல்வதை கேட்டு அரசும் அதற்கேற்ப ஆடுகிறது.

ரஞ்சன் விஜயரத்ன:- இதனல் பொருளாதாரம் வளர்ச்சியடைந்து வருகிறது. நாம் 11 வருட காலத்தில் செய்த வேலைகளை 100 வருடம் சென்றலும் நீங்கள் செய்து முடிக்க மாட்டீர்கள்.

செனவிரத்ன:- யார் மீதோ கொண்ட கோபத்தை நீங்கள் என் மீது காட்டுகிறீர்கள்.

ரஞ்சன்:- நாம் இருவரும் நல்ல நண்பர்கள். தவருன வாதத்தின்போது எனது கருத்தைக்கூற எனக்கு உரிமை உண்டு.

### இனிக்க இனிக்க பேசுவோம்

செனவிரத்ன:- சீனி விலையைப்பற்றியும், பெல்வத்தை சீனிக் கம்பனி பற்றியும் கூறும் போது யாருக்கும் கசக்கக் கூடாது. இனிக்க இனிக்க அதனைப்பற்றி பேசுவோம். (சிரிப்பு)

அமரசிறி தொடங்கொட:- இஸ்ரவேல் காரர்களுடனும் சர்வதேச ஆயுத வர்த்தகர்களுடனும் இரகசிய தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டு அதனல் பெற்ற ஆயுத பலத்தைக் கொண்டே அரசு ஆட்சியை நடத்துகிறது.

ரஞ்சன்:- நீங்கள் 1971ல் எப்படிநடந்து கொண்டீர்கள்.

தொடங்கொட:- அப்போது உங்களுக்கு தலைமுடி பழுத்திருக்கவில்லை. இப்போது தான் பழுத்துள்ளது. நீங்கள் நடத்துவது ரூபவாஹினி அரசியல் ரேடியோ அரசியல். (கூச்சல்)

ரஞ்சன் ஏதோ கூறுகிருர்.

தொடங்கொட:- இன்று மக்கள் அவசர காலச்சட்டத்தையோ ஊரடங்கு சட்டத்தையோ வேறு எந்த சட்டத்தையோ மதிப்பதில்லை மக்கள் இச்சட்டங்களை ஏற்றுக்கொள்ளவில்லை.

கூச்சலில் எதுவும் கேட்கவில்லை.

இன்று அரசாங்கம் என்று ஒன்று இல்லை. அது கொழும்பில் மட்டுமே இருக்கிறது. அரசாங்கம் பணத்தைத் திரட்டி நிதியமைச்சருக்கு கொடுக்கிறது. நிதியமைச்சரும் ஏதோ செய்கிருர். ஆனல் நடப்பது வேறு. விவசாயிகள் விதைப்பதற்கு நீரை எதிர் பார்த்துக் கொண்டிருக்கும் நேரம் குளத்திலிருந்து திறந்து விடும் நீர் கால்வாயிலேயே வரும் வழியில் வற்றிப்போய் விடுகிறது. இப்படித்தான் அபிவிருத்தி நடக்கிறது. (கூச்சல்)

ரஞ்சன்: உங்கள் காலத்தில் வயலில் விவசாயம்தான் செய்தார்களா என்று எனக்கு தெரியாது, [illegible] என செய்வது. அமைச்சரை ஒரே நேரத்தில் இரண்டு பாடசாலைகளுக்கு அனுப்பியிருக்கிருர்கள், இதனல்தான் புரிந்து கொள்ளமுடியவில்லை. முண்டம் ஒக்ஸ்போர்ட்டுக்கும் தலை 'மொண்டிசோரி' க்கும் தான் போயுள்ளது.

(எதிர்க்கட்சியினர் கரங்களைத்தட்டி ஆரவாரம். (சிரிப்பு)

### ஆயுத பலத்தால் அடக்கமுடியாது

தினேஷ் குணவர்த்தன;- பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழும், அவசரகாலச் சட்டத்தின் கீழும் இளைஞர்கள் கொல்லப்படுகிருர்கள். மொத்த சனத்தொகையில் 80 சத வீதமாயுள்ள இளைஞர் பரம்பரையை ஆயுதபலத்தால் அடக்கிப் பிரச்னைகளைத் தீர்க்கமுடியாது.

லக்ஷ்மன் ஜயக்கொடி;- (குறுக்கீடு) அவசரகாலக் சட்டம் பற்றி விவாதிக்கப்போவதாக இன்று காலை நாம்அறிந்தோம்.

### பாராளுமன்றம் கேளிக்கைக்குரிய இடமல்ல

தினேஷ்;- காலையில் பாராளுமன்றம் கூடியபோதே எனக்கு 30 நிமிடம் ஒதுக்கப் பட்டதாகக் கூறப்பட்டது அதனைச் சபாநாயகரே அறிவித்தார். ஆனல் சபாநாயகர் இல்லாத நேரத்தில் எனக்கு 20நிமிடம் ஒதுக்கப்பட்டுள்ளதாகக் கூறுகிருர்கள். பாராளுமன்றம் பாராளுமன்றமாக இயங்கட்டும். அது கேளிக்கைக்குரிய இடமென்றல்நான் இங்கு வந்ததில் அர்த்தமில்லை.

[எங்கும் கூச்சல் எழுகிறது]

(சிறிது நேரத்தில் சபாநாயகர் ஆசனத்தில் வந்து அமருகிருர்)

ரிச்சார்ட் பத்திரன:- அவசரகாலச் சட்டத்தை விவாதிக்கப்போவதாக இன்றுகாலையில் இங்கு வந்ததின்பின் தான் அறிந்துகொண்டோம். ஆனல் அரச தரப்பு எம். பி.க்களுக்கு மாலையில் வாக்களிக்க வேண்டும் என முன்னறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளது. பாராளுமன்றமுறை இது தானு? காலையில்ஒதுக்கப்பட்ட நேரம் மாலையாகும் நேரத்தில் இரகசியமாகக் குறைக்கப்படுகிறது.

சபாநாயகர்;- இன்று காலையில் சபை முதல்வா, அவசர காலச் சட்டத்தின் மீதான வாக்கெடுப்பினை மாலையில் நடத்தவேண்டும் என எனக்கு தெரியப்படுத்தியிருந்தார். கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானம் என்றே இதனைக்கருதுகிறேன்.

ரணில் விக்கிரமசிங்க:- (சபை முதல்வர்) இதுதொடர்பாக விவாதம் நடத்தப்பட வேண்டுமென எதிர்க்கட்சிகளே கோரின. பேச்சு நடத்தியபின்பே விவாத காலம் ஒதுக்கப்பட்டது.

அஸ்ரப்:- காலையில் முஸ்லிம் காங்கிரசுக்கு 30 நிமிடம் ஒதுக்கப்பட்டதாகக் கூறப்பட்டது. நான் பேசும்போது 20 நிமிடம் தான் கூறப்பட்டது. இவை ஒலிப்பதிவில் இருக்கின்றன.

சபாநாயகர்:- மாலையில் விவாதம் வாக்கெடுப்புக்கு விடப்படும் என்று அறிவிக்கப்பட்டபோது காலையில் யாரும் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை.

ரிச்சர்ட்பத்திரன:- அந்த நேரம் கட்சித் தலைவர்கள் சபையில் இருக்கவில்லை.

### 'அமிர்' கண்டனம்

அமிர்தலிங்கம்:- எமது கட்சியில் 10 பேர் இருக்கிருர்கள். 30 நிமிடத்தில் அவர்களுக்கு பேசிமுடிக்க இயலாது. இப்படிப்பட்ட தீர்மானம் எடுக்கப்பட்டதனை வன்மையாக எதிர்க்கிறேம்.

### இரத்த ஆறு ஓடுவதை அனுமதிக்க முடியாது

ஸ்டான்லி திலகரத்ன:- அவசர அவசரமாக விவாதமும் நடத்தப்பட்டு வாக்கெடுப்பும் நடத்தப்படவுள்ளது. இதற்குக்காரணம் நாளை நடக்கவுள்ள கம்உதாவ கொண்டாட்டம் தான் அரசதரப்பினர் எல்லோரும் அங்கு செல்லவிருக்கிருர்கள். மாலை 4-30 மணிக்கு வாக்கெடுப்பு நடத்த அனுமதிக்கப்படக் கூடாது. இச்சட்டத்தின்கீழ் நாளைபலரும்கைது செய்யப்படுவதனை நாம் காணத்தயாராக இருக்கக் கூடாது. வாக்கெடுப்பு நடத்த விடமாட்டோம், (எங்கும் கூச்சல்) இரத்த ஆறு நாட்டில் ஓட நாம் அனுமதிக்க முடியாது? நாளை நடக்கவிருக்கும் எதிர்கால பயங்கரத்துக்கு நாம் காரணமாக மாட்டோம். (கூச்சல், ஆரவாரம்)

ரிச்சர்ட் பத்திரன; கட்சித் தலைவர்களுடன் பேசியதாகக் கூறப்படுவது தவருனது. சகல தலைவர்களுடனும் பேசப்படவில்லை.

அரசதரப்பில் ஒரு குரல்: எல்லோருமே கட்சித் தலைவர்களாகப் பார்க்கிருர்கள்.

சபாநாயகர்: இது மிகமுக்கியமான ஒரு விவாதம். அதனல் இன்றே முடிவுக்குக் கொண்டுவர வேண்டும். இதனல் கட்சித் தலைவர்கள் என்னைச் சந்தித்துப்பேசவும்.

கே. பி. ரத்நாயக்கா: இது தொடர்பாக ஒரு கொள்கை இருக்கவேண்டும், இல்லாவிடில் அலங்கோலமாகவே இது அமையும்.

சபாநாயகர்: கொள்கை ஒன்று இருக்க வேண்டும் என்பதை நானும் ஏற்றுக்கொள்கிறேன். கட்சித் தலைவர்கள் இதுபற்றிக் கதைக்க எனது அறைக்கு வாருங்கள்.

பிரதித் தலைவர் சபையை ஏற்கிருர்.

ஸ்டான்லி திலகரத்ன: அண்மையில் நான் கதிர்காமம் செல்ல முடிந்தது. அங்கும் ஒரு பாராளுமன்றம் இருந்தது. அங்கு பெருமளவு எருமை மாடுகள்தான் இருந்தன. அங்குள்ள மக்கள் சொன்னர்கள் 'இவர்கள் தான் பாராளுமன்ற அமைச்சாகள்'' என்று. சில அமைச்சர்கள் கொம்புகளுடனும் சில அமைச்சர்கள கொம்பில்லாமலும் இருந்தன. (பலத்த சிரிப்பு. மேசையில் தட்டி ஆரவாரம்)

அரசதரப்பு குரல்: அங்கு ஒரு எருமைமாடு ஸ்டான்லி திலகரத்ன என்ற பெயரில் இருந்திருக்குமே. (பலத்த சிரிப்பு)

ரிச்சட் பத்திரன: முன்னைய ஜனதிபதியின் பாரியாரை இந்த பாராளுமன்றம் இன்னும் மதிக்கிறது, அவரை நல்ல உள்ளம் படைத்தவர், உத்தமி என்று தான் இன்றும் இப்பாராளுமன்றத்தில் பேசப்படுகிறது. (எதிர்கட்சி மேசையில் தட்டி வரவேற்கிறது) ஆனல் இன்று நடப்பதை நான் கூறவில்லை.

அத்தாவு செனவிரத்ன: நமது ஜனதிபதி இப்போது தர்ம அசோகனுக முயற்சித்துக் கொண்டிருக்கிருர். (சிரிப்பு)

கம் உதாவ என்ற பெயரில் மூலைமுடுக்கெல்லாம் 'விகாரை'களையும், பண்சலைகளையும் அமைத்து வருகிருர். புண்ணியவான்என்றபெயரையும்தட்டிக் கொள்வதுதான் அவரின் இலட்சியம்.

(மிகுதி நாளை வரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியில் தொடர்ந்து பதற்றம்!

## பொதுமக்கள் ஆலயத்தில் தஞ்சம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சிப் பகுதியில் தொடர்ந்து பதற்றம் நிலவுகிறது.

நேற்று முன்தினமும் திருநகர்ப் பகுதியில் ஹெலிகொப்டர் தாக்குதல் இடம்பெற்றது.

கிளிநொச்சிப் பகுதியில் இரண்டாவது நாளாக பதற்ற நிலை காணப்பட்டது.

திருநகர்ப் பகுதியில் ஹெலிகொப்டர் தாக்குதல் இடம்பெற்றது. பொதுமக்கள் பாதுகாப்புத் தேடி இடம் பெயர்ந்துள்ளனர்.

ஷெல் தாக்குதலிலும், துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்திலும் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதாக அஞ்சப்படுகிறது. இரு தினங்களாக இடம்பெற்ற சம்பவங்களில் பொதுமக்கள் தரப்பிலும் சேதமேற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இப்பகுதிகளில் தேடுதல் வேட்டையும் தொடர்ந்து இடம்பெற்றுவருகிறது. பொதுமக்கள் ஆலயங்களிலும், குறிப்பாக கிளிநொச்சி கந்தசுவாமி கோவிலிலும் தஞ்சம் அடைந்துள்ளனர்.

## விபத்தில் பலியானார்

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை சந்தனமாதா கோயிலருகில் இடம்பெற்ற மினிவான்-மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கிய கந்தையா தனபாலசிங்கம் (45 வயது) என்பவர் ஸ்தலத்திலேயே பலியானார்.

# "கருத்துவேறுபாடுகளை களைந்து ஒன்றுபடவேண்டிய தருணம்"

## தமிழ் ஈழ விடுதலை இயக்கம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

''எமது மக்களின் அடிப்படை உரிமைகளைப் பெறும் நாள் வெகு தொலைவில் இல்லை என்பதை நிரூபிக்க நமக்குள் இருக்கும் கருத்து வேறுபாடுகளைக் களைந்து ஒன்றுபட வேண்டிய தருணம் இதுவேயாகும்.''

இவ்வாறு தமிழ் ஈழ விடுதலை இயக்க (ரெலோ) யாழ். மாவட்டப் பொறுப்பாளர் வி. ஜி. செந்தோழன் பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

''இன்று எமது மண்ணில் அகால மரணங்களும், சோக கீதங்களும், மக்கள் மத்தியில் பீதியும் சங்கிலித் தொடர் போல் தொடர்ந்தவண்ணம் இருக்கின்றன. எம் இனம், எம் இனத்தையே அழித்தொழிக்கும் அளவுக்கு வளர்ந்துவிட்டது. எதற்காக ஆயுதம் ஏந்தினேமோ, அவ்வாயுதம் இன்று எம்மக்களுக்குளதிராகப் பயன்படுத்தப்படுகிறதென்றால் அறியாமையே.

''தினமும் கொலைகளும், கொள்ளைகளும், ஆட்கடத்தல்களும் அன்றட வாழ்வில் காணக்கூடியதாயிருக்கிறது. அறிவாளிகள் ராஜத்துரோகிகளாக கருதப்பட்டுச் சுடப்படுகிறார்கள், மாணவர்கள் கடத்தப்படுகிறார்கள். இதனால் எம் மக்களுக்குத்தான் நஷ்டம் என்பதைச் சம்பந்தப்படுகிறவர்கள் உணர்ந்துகொள்வதில்லையே. ஒரு பெண் தனியாக நகைகளுடன் வீதியில் பயமின்றிச் சுதந்திரமாக நடமாடக்கூடிய ஒழுங்குகள் இன்றில்லை.

''சுரண்டலும், கொள்ளையும், சுகபோக வாழ்வுகளும் அடுத்தடுத்து அனுபவித்துவருபவர்கள் இதை விரும்பமாட்டார்களா? சுதந்திரப் போர்ப் பரணி சாதுக்களிடமிருந்து புறப்பட்டால் தாக்குப்பிடிப்பார்களா?

''எமக்குள் ஒற்றுமையை வளர்த்து செயற்படுவோமானால் இந்திய அமைதிகாக்கும் படை தானகவே வாபஸ் பெறும் என்பதை நாமும் உணரவில்லையே. நாம் எம் மக்கள் அழிவைத்தான் எதிர்பார்க்கின்றோம் என்று எதிர்பார்ப்பவர்கள் இருக்கு மட்டும் தமிழீழ தாயகத்தையோ ஜனநாயகத்தையோ நிறுவ முடியாது. எம்மக்கள், எம் இனம், சுதந்திரம் சமத்துவம் சகோதரத்துடன் வாழ வேண்டும் என்று அறைகூறியவர்கள் இங்கு எம்மக்களை நசுக்கும் அளவுக்கு புத்திஜீவியற்றுப் போனார்கள். எம்மிடத்தில் ஒற்றுமையின்மையே காரணம்,

''எம்மக்கள் சுதந்திரமாக நடமாடவும், சுதந்திரமாக பேசுவதற்கும், அமைதியையும், சமாதானத்தையும் கண்டு மகிழ்வதற்கும் பல தியாக உள்ளங்களை துப்பாக்கிக்குண்டுக்கு இரையாக்கியும் தூக்குக்கயிற்றை முத்தமிட்டும், சிறைபுகுந்து கொடுமைகளை அனுபவித்தவர்களுக்கும் நாம் செய்யும் ஒரே தியாகம், கொலைகளையும் மாணவர் கடத்தலையும் உடன் நிறுத்துவதேயாகும். இதனை தமிழ் ஈழவிடுதலை இயக்கம் மக்களின் சார்பில் கேட்டுக்கொள்கிறது''.

## இலங்கை நிலைமை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நிலையை ஏற்படுத்தும்.

நாட்டில் ஏற்பட்டுள்ள குழப்ப நிலையால் நேரடியாகவோ மறைமுகமாகவோ வெளிநாட்டுப் படைகளின் தலையீடும் இருக்கும். இந்திய அமைதிப்படையுடனான மோதலும் தொடரும்'' என்றும் திரு. ராமன் தெரிவித்துள்ளார்.

இலங்கையிலிருந்து இந்திய அமைதிப்படை வெளியேற வேண்டுமென்று ஜனாதிபதி பிரேமதாசா கோருவாரென்று இவர் கடந்த ஏப்ரலில் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## ஜே. வி. பி.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அந்த அதிகாரிகுறிப்பிட்டார்.

1987 ஏப்ரலிலிருந்து ஜே. வி. பி.யின் தாக்குதல்களில் இதுவரை 30க்கும் மேற்பட்ட பாதுகாப்பு படைமுகாம்கள் தாக்குதல்களுக்கு இலக்காகியுள்ளன. 18 பொலிஸ் நிலையமும், 9 இராணுவ, விமானப் படை முகாம்களும். மூன்று ஊர்காவல்படை முகாமும், ஒருதேசிய துணைப்படைமுகாமும் தாக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் பெரும்தொகை ஆயுதங்களும், வெடிமருந்துகளும், பல தொடர்பு சாதனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன, இவற்றில், கொத்தலாவல 'அக்கட'மியிலும் அண்மையில் திஸமகாராமபொலிஸ் நிலையத்திலுமிருந்தே பெருந்தொகை ஆயுதங்களும், வெடிமருந்துகளும் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

எனினும் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களைவிட. புதிய நவீனரக ஆயுதங்களும், கண்ணிவெடித் தாக்குதல்களுக்கு பெருமளவு 'ஜெலிக் நைற்' பயன்படுத்தப்படுவதும் மற்றும் தொடர்பு சாதனங்களும் வெளிநாடுகள் உதவி மூலம் கிடைத்திருக்கலாமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## இடதுசாரி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மீதுமே ஜே. வி, பி. தாக்குதல்களை நடத்தலாமென எதிர்பார்க்கப்படுவதாகவும் தெரியவந்துள்ளது.

ஜே. வி. பி.யின் இராணுவப் பிரிவான 'டி. ஜே. வி.' இயங்குவதுபோல், என். எஸ். எஸ். பி.யிலும் ஆயுதப்பிரிவு ஒன்று இயங்குவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## சார்க்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மற்றொரு அங்கத்துவநாட்டின் சுதந்திரத்திற்கு இடையூறு உண்டு பண்ணும் விதத்தில் நடந்துகொள்ளலாகாது.

''நாம் சிறிய நாட்டைச் சேர்ந்தவர்களாயிருந்தாலும், எமது சுயமரியாதையை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

''சார்க் அமைப்பு வெளிவிவகார அமைச்சர்கள் மாநாட்டில் இலங்கை கலந்துகொள்ளமாட்டாது என்ற தீர்மானம் அங்கத்துவநாடுகளுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது''.

## இன்று

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்டத்தில் உள்ள சகல அரச திணைக்களங்களின் தலைவர்களைக் கொண்ட ஆலோசனைக் கூட்டமொன்று இன்று யாழ். செயலகத்தில் நடைபெறுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது. யாழ். மாவட்டப் பதில் அரசாங்க அதிபர் இக்கூட்டத்திற்குச் சமூகமளிக்குமாறு திணைக்களத் தலைவர்களைக் கேட்டுள்ளார்.

## தென்பகுதி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பிதமடைந்தன.

இராணுவத்தினர் ஒரு சில பஸ்களை சேவையிலீடுபடுத்திய போதிலும் பிரயாணிகள் மிகவும் குறைவாகவே காணப்பட்டனர். வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள இ. போ. ச, ஊழியர்கள் வேலைக்கு திரும்பவேண்டும் அல்லது வேலையிலிருந்து நீக்கப்படுவர் என்று நேற்றுவரை அரசாங்கம்காலக்கெடு விதித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## ஐந்துபேர் சுட்டுக்கொலை

இதற்கிடையில் இப்பகுதிகளில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் ஐந்திற்குமேற்பட்டோர் கொல்லப்பட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையே இலங்கை போக்குவரத்துச்சபை ஊழியர்கள் தமது கடமைகளுக்குத் திரும்புவதற்கான காலக்கெடு இன்று செவ்வாய்க்கிழமை வரை நீடிக்கப்பட்டிருப்பதாக போக்குவரத்து அமைச்சு நேற்று அறிவித்தது.

சம்பந்தப்பட்ட ஊழியர்கள் அனைவரும் நேற்று (திங்கட்கிழமை) வேலைக்குத்திரும்ப வேண்டுமென்று போக்குவரத்து அமைச்சு நேற்று காலக்கெடு விதித்திருந்தது தெரிந்ததே.

நேற்று போதிய போக்குவரத்து வசதிகள் இல்லாத காரணத்தினலேயே இந்தக் காலக்கெடு இன்றுவரை நீடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

## பருத்தித்துறையில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிணிப்பெண் ஒருவர் படுமோசமாகத் தாக்கப்பட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை தேடுதலின்போது தாக்குதலுக்குள்ளாகி மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டோர் விபரம் வருமாறு; சங்கரப்பிள்ளை சிவபாதசுந்தரம் (வயது 39), வி. யோகநாதன் (வயது 26), எஸ். விவேகானந்தன் (வயது 32), பத்மநாதன் ரங்கநாயகி [வயது 21].

மேலும் பலர் சிறுகாயங்களுக்கு சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளனர்.

## கரவெட்டியில்

கரவெட்டி நாவலர்மடத்தடியில் நேற்றுக்காலை குண்டு வெடிப்புச் சத்தங்கள் கேட்டன.

இதனைத்தொடர்ந்து வீதிகள் யாவும் வெறிச் சோடிக் காணப்பட்டன.

## ஜே. வி. பி. அரசியல்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வேஜுகளுடன் கைதானதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அவசரகால சட்டம் அறிவிக்கப்பட்ட பின்னர் ஜே. வி. பி. உறுப்பினர்கள் என்ற சந்தேகத்தின்பேரில் இதுவரை 200 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## முல்லைத்தீவில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கே. அனுஸ்ரலா (வயது 4), ரீ. சுசீலாதேவி (வயது 18) ஆகியோரே படுகாயங்களுக்குள்ளான நிலையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர். இவர்களின் வீடுகளுக்கருகில் விழுந்து சிதறிய ஷெல்களின் காரணமாகவே இக்காயங்கள் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இவர்கள் மூவரும்நேற்று சத்திரசிகிச்சைக்குட்படுத்தப்பட்டனர்,

இதேநேரத்தில் முல்லைத்தீவில் இடம்பெற்ற ஷெல் தாக்குதலில் மூள்ளியவளையைச் சேர்ந்தஎஸ். பொன்னுத்துரை (63 வயது) என்பவர் காலில் காயமடைந்த நிலையில் யாழ். போதனு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இன்று கடமைக்குத் திரும்பாத ஊழியர்கள் தமதுபதவிகளை இழந்தவர்களாகவே கருதப்படுவர் எனவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இதேவேளையில் நேற்று கொழும்பு மாநகரிலும்அதன் சுற்றுப்புறங்களிலும் பாதைகள் வாகனப் போக்குவரத்து இல்லாது வெறிச்சோடிக் காணப்பட்டன.

ஒரு சில பஸ்களே பாதுகாப்புப்படையினரின் பாதுகாப்புடன் சேவையிலீடுபட்டிருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

அநேகமான அலுவலகங்கள். கடைகள், ஹோட்டல்கள் ஆகியவை நேற்று மூடிக்கிடந்தன எனவும் கூறப்பட்டது.

## பத்திரிகைகளும் இல்லை

ஜே, வி. பி.யினர் அறிவித்திருந்த உத்தியோகப்பற்றற்ற ஹர்த்தால் நேற்று கொழும்பு பத்திரிகைகளையும்பாதித்தன.

எப்போதுமில்லாதவாறு நேற்று பத்திரிகைகள் எதுவும் வெளிவரவில்லை.

## இலங்கை

(1ம் பக்கத் தொடச்சி)

புதுடில்லியில் வெளிவிவகார அமைச்சு அதிகாரி ஒருவர் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

இதேவேளையில் சார்க் மாநாட்டில் இந்தியாவுடனை இருதரப்பு பிரச்சனைகளை எழுப்புவதற்கு விருப்பம் தெரிவித்து இலங்கை பாகிஸ்தானுக்கு கடிதம் எழுதியிருப்பதாகவும் அந்த அதிகாரி தெரிவித்திருக்கிறார்.

இலங்கை இருதரப்பு பிரச்னையை சார்க் மாநாட்டில் எழுப்ப முயற்சித்திருப்பது இது மூன்றாவது தடவை எனவும் தெரிவிக்கப்பட்டது.

இத்தகைய முயற்சியை இந்தியா ஏற்காது எனவும் அந்த அதிகாரி தெரிவித்திருக்கிறார்.

## நேற்று வெளியான

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மைச்சித்தி (D) பெற்றுள்ளார்கள்.

இப்பாடசாலையில் 24 மாணவர்கள் 5 பாடங்களிலும். 29 மாணவர்கள் 3 பாடங்களிலும் அதிதிறமைச் சித்தி பெற்றுள்ளார்கள்.

யாழ். இந்துவிலிருந்து பரீட்சைக்குத் தோற்றிய 209 மாணவர்களில் 205 மாணவர்கள் உயர்தர வகுப்புக் கற்பதற்கான தகுதியைப் பெற்றுள்ளார்கள்.

யாழ். சென், ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த 13 மாணவர்கள் 6 பாடத்தில் அதிதிறமைச் சித்தியையும், 14 மாணவர்கள் 5 பாடங்களிலும், 13 மாணவர்கள் நான்கு பாடங்களிலும், 14 மாணவர்கள் 3 பாடங்களிலும் அதிதிறமைச் சித்தி பெற்றுள்ளனர்.

வேம்படி மகளிர் கல்லூரி, யாழ். சுண்டுக்குளி மகளிர் கல்லூரிகளில் 6 மாணவிகள் 6 பாடங்களிலும் அதிதிறமைச் சித்தி பெற்றுள்ளார்கள்.

யாழ்.இந்து மகளிர் கல்லூரி மாணவிகள் 5 பேர் 6 பாடங்களில் அதிதிறமைச் சித்தியடைந்ததுடன் 12மாணவிகள் 5 பாடங்களில் அதிதிறமைச் சித்தி பெற்றுள்ளார்கள். 176மாணவிகள் உயர்தர வகுப்புக் கற்பதற்கான அனுமதியைப் பெற்றுள்ளார்கள்.

வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகளில் 8 பேர் 5 அதிதிறமைச் சித்தியும், 4 பேர் 4 அதிதிறமைச் சித்திகளையும் பெற்றுள்ளார்கள்.

சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் 7 மாணவிகள் 5 அதிதிறமைச் சித்திகளைப் பெற்றுள்ளார்கள்.

சென். பற்றிக்ஸ் கல்லூரியை சேர்ந்த ஒரு மாணவன் 6 பாடத்திலும் அதிதிறமைச் சித்திகளைப் பெற்றுள்ளதுடன் 2 மாணவர்கள் 5 பாடத்திலும் அதிதிறமைச் சித்திகளையும் பெற்றுள்ளார்கள்.

யாழ். கனகரத்தினம் மத்தியமகாவித்தியாலயத்தில் ஒரு மாணவன் 4 அதிதிறமைச்சித்திகளையும் இரு விசேட சித்திகளையும் பெற்றுள்ளார். இந்தப் பாடசாலையிலிருந்து 40 மாணவர்கள் உயர்தர வகுப்பிற்கான தகுதியைப் பெற்றுள்ளார்கள்.

யாழ். மத்திய கல்லூரியில் ஒரு மாணவன் 5 பாடங்களில் அதிறமைச் சித்தியைப் பெற்றுள்ளதுடன் 89 மாணவர்கள் உயர்தர வகுப்பிற்கு தகுதி பெற்றுள்ளனர்.

யாழ். மாவட்டத்திலுள்ள பன்னிரண்டு பாடசாலைகளுக்கு பரீட்சை முடிவுகள் இதுவரையும் அனுப்பப்படவில்லை.

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1989ம் ஆண்டு ஜூன் மாதம் 27-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003e6/81. Eelanadu P. O. Box No: 49. Telegram, Eelanadu. Telephone: 22389. 24126.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org